தமிழ் முரசு

ஆசிரியர்: ம. பொ. சிவஞானம்

1950 ஜூலை

விலை 4 அணா

வீரக்கண்ணகி

○

தமிழரசுக் கழகத் தலைவர்

திரு. ம. பொ. சிவஞானம்

எழுதியது

○

அரசியல் கண்ணோட்டத்துடன்
ஆராய்ந்து எழுதப்பட்ட
அரிய நூல்

○

அச்சாகிக் கொண்டிருக்கிறது

விரைவில் வெளிவரும்

○

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே,!
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

தமிழ் முரசு

தொகுதி 4 :: சென்னை 1950 - ஜூலை :: பகுதி 3

பொருளடக்கம்

●

போர் வெறி ஒழிக!	தலையங்கம்	3
நாட்டு நடப்பு		8
சிலம்பு காட்டும் செந்நெறி		10
வள்ளுவர் வகுத்த வழி -		17
சென்னையில் ஆந்திரர் ஆதிக்கம்	"வண்டு"	22
தமிழை மறந்து தமிழ் நாட்டில் வாழலாம்?	டாக்டர் மு. வ.	25
ஆட்கொட்டவள்—(கவிதை)	கா. மு. ஷெரீபு	29
சுவிட்சர்லந்தில் அரசியல் முறை	சோம. லெ. இலக்குமணச் செட்டியார்	30
சூழ்நிலை	மு. கோவிந்தசாமி	34
மதிப்புரை		36
"எல்லோரும் கேளுங்கள்!"	ம. பொ. சி.	37
தமிழரசு காண்போம்!	கி. கவிதைநேசன்	43
செய்திகள்		45

"செங்கோல்"

(தமிழ் அரசு இயக்க வாரப்பதிப்பு)

●

விரைவில் வெளி வரும்

○ துவக்க ஏற்பாடுகள் யாவும் நடைபெற்று வருகின்றன.

தமிழ் முரசு

திருவள்ளுவராண்டு 1981 ஆனி

போர் வெறி ஒழிக!

கடந்த மகாயுத்தத்தாலேற்பட்ட பஞ்சம், பட்டினி, அகவிலை ஆகிய கொடுமைகள் மறையு முன்னரே இன்னொரு பெரும் போருக்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. கொரியா ஒரு தனி நாடு. அப்படியிருந்தும், வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டி காரணமாக அந்நாடு 'வட கொரியா'வென்றும், 'தென் கொரியா'வென்றும் பிரிக்கப்பட்டது. வட கொரியா, ரஷ்யாவின் செல்வாக்கிலும், தென் கொரியா அமெரிக்காவின் ஆதிக்கத்திலும் இருந்து வருகின்றன என்பது உலகறிந்த உண்மை. இப்போது 'ஐக்கிய கொரியா' என்று கோஷமிட்டுக் கொண்டு, வட கொரியா, தென் கொரியா மீது போர் தொடுத்திருக்கிறது. வட கொரியாவின் செய்கையை ஆக்கிரமிப்பாகக் கருதுகிறது அமெரிக்கா. அதற்கு 'உள்நாட்டுப் போர்' என்று பெயர் கொடுக்கிறது ரஷ்யா. ஆனால், ஒரு உண்மை மட்டும் புலனாகிறது. வட கொரிய அரசாங்கத்திற்கு கம்யூனிஸ்டு ரஷ்யாவும், சீனாவும் ஆயுத உதவி செய்து வருகின்றன என்பது மறைக்க முடியாத உண்மை. இந்த இரு நாடுகளும் வட கொரியாவுக்கு ஆதரவு காட்டாமலும், ஆயுதங்கள் கொடுக்காமலும் இருந்திருக்குமாயின், தென் கொரியா மீது படையெடுக்கும் தெம்பு வட கொரியாவுக்கு ஏற்பட்டிராதென்பது உண்மையே. ஆனால், கம்யூனிஸ்ட் நாடுகள், வட கொரியாவுக்கு ஆயுதம் வழங்கிய காரணத்தாலேயே அமெரிக்கா போரிலிறங்கித் தீரவேண்டும் என்ற அவசியமில்லை. வேண்டுமானால், கம்யூனிஸ்டு நாடுகளைப் போலவே, அமெரிக்காவும் தென் கொரியாவுக்கு ஆயுத உதவியளிப்பதோடு நின்றிருக்கலாம். அப்படிச் செய்

திருக்குமாயின், கொரியாவின் உள்நாட்டுப் பிரச்னையை அந்நாட்டு மக்களே போரிட்டு தீர்த்துக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். அப்படிக்கின்றி, கொரியாப் போரில் அமெரிக்கா நேரிடையாகக் குதித்து விட்டதால் உலகமே ஒரு குழப்பத்துக்குள்ளாகி யிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சங்கப் பாதுகாப்புக் கமிட்டியும், அவசர அவசரமாகக் கூடி அமெரிக்காவின் செயலுக்கு ஆதரவு காட்டியிருக்கிறது. கொரியாப் போரில் அமெரிக்காவின் கட்சி சரியா? ரஷ்யாவின் கட்சி சரியா? என்பதை ஆராயுமுன்னர், இந்த இரு நாடுகளும் கொரியாப் பகுதிகளுக்கு ஆயுத உதவியளிக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை ஆராயவேண்டும். அப்படி ஆராய்ந்தால் வல்லரசுகள் தத்தம் கட்சிக்குப் பலம் தேடவே கொரியாவைப் போர்க்களமாக்கி விட்டன என்பது புலப்படும்.

கொரியாப் போர் ஒரு உலக யுத்தமாக வளர்ந்து விடுமா? வளராதென்பதே நமது கருத்து. ஆனல், பின்னல் வரவிருக்கும் ஒரு பெரும் போருக்கு இது "ஒத்திகை" என்பதில் ஐயமில்லை. அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் ஏற்பட்டுள்ள பகைமையும் பரஸ்பர சந்தேகங்களும் நீங்கினலொழிய, ஒரு பெரிய உலகப்போர் நம்மை எதிர்நோக்கியிருக்கிறதென்பதில் ஐயமில்லை. உலகிலேயே முதன்மை வாய்ந்த வல்லரசுகளான அமெரிக்காவும், ரஷ்யாவும் மோதிக் கொள்ளாமல் தடுப்பதில்தான் ஏனைய நாடுகள் கவனம் செலுத்த வேண்டும். ஆனல், கொரியாப் போரின் எதிரொலியைக் கவனித்தால் அப்படி நேருமென்ற நம்பிக்கை ஏற்படவில்லை. யார் எந்தக் கட்சியுடன் சேருவது என்பதுதான் இன்றையப் பிரச்னையாக இருக்கிறது. அமெரிக்கா போரில் குதித்த மறுகணமே பிரிட்டன், ஆஸ்திரேலியா, டச்சு ஆகிய நாடுகளும் அதற்குத் துணையாகப் போரில் இறங்கிவிட்டன. உலகத்தின் அமைதியைக் குலைக்கும் இந்த அபாயகரமான சூழ்நிலையில் நமது இந்தியாவின் போக்குதான் ஓரளவு ஆறுதலளிப்பதாக இருக்கிறது. ஐ. நா. பாதுகாப்புக் கமிட்டியில் தனது கட்சிக்குச் சாதகமாக இந்தியாவின் வாக்கைப் பெறுவதற்கு, அமெரிக்கா தனது திறமை முழுவதையும் கையாண்டு தோல்வியடைந்து விட்டது. இந்தியப் பிரதிநிதியான சர். பி. என். ராவ் மிகவும் ராஜதந்திரத்துடன் நடந்து கொண்

டது பாராட்டத்தக்கது. மீண்டும் ஒரு உலக யுத்தம் மூளு மானல் அதில் முடிந்தவரை நடுநிலைமை வகிப்பதே இந்தியாவின் நோக்கம் என்பதை முன்னரே பண்டித நேரு தெளிவாக்கியிருக்கிறார். அதைச் சரியான சந்தர்ப்பத்தில், சரியான இடத்தில், செயலால் நிரூபித்து விட்டார் சர். பி. என். ராவ்.

கொரியாப் போர் பற்றி இந்திய அரசாங்கமும் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறது. அதில் தென் கொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா போரிலிறங்கியது நியாயம் என்று கூறியிருக்கிறது. இது நடுநிலைமையான ஒரு நாட்டின் அபிப்பிராயமென்றே கருதலாம். பிரிட்டன், ஆஸ்திரேலியா, டச்சு நாடுகள் போன்று இந்தியாவும் ஆயுதபாணியாக போர்க்களத்தில் புகவில்லை என்பதை மறந்துவிடக் கூடாது. அமெரிக்காவின் கட்சியில் நியாய மிருக்கிறது என்று இந்தியா கூறியதனாலேயே அது ரஷ்யாவுக்கோ அல்லது வடகொரியாவுக்கோ எதிராக ஆயுத மேந்தத் தயாராகிவிட்டதென்று அர்த்தமல்ல. நடுநிலைமை வகிக்கும் ஒரு நாடு, யுத்தம் செய்யும் இரு நாடுகளில் எந்த நாட்டினிடம் நியாயம் இருக்கிறது என்பதைப்பற்றி தனது கருத்தைக் கூறுவதில் தவறு ஒன்றுமில்லை. அமெரிக்காவுக்குச் சாதகமாக இந்தியா அபிப்பிராயம் கூறினாலும், போரில் புகுந்துள்ள நாடுகளிடையே சமரசம் ஏற்பட வேண்டுமென்பதில் தனக்குள்ள பேராவலையும் அது வெளிப்படுத்தியிருக்கிறது. ஆகவே ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கு மிடையே சமரசம் செய்து வைக்கும் பொறுப்பை இந்தியா மேற்கொள்ள வேண்டும். அடுத்த உலக யுத்தத்திற்கு ஆசியாவே கேந்திர ஸ்தானமாக இருக்குமென்று தெரிவதால் இந்தியா மிகவும் எச்சரிக்கையுடன் பணியாற்றக் கடமைப் பட்டிருக்கிறது. 200 ஆண்டுகள் அடிமைத்தனத்திலிருந்து இந்தியா இப்போதுதான் விடுதலை பெற்றிருக்கிறது. சாதி, சமய, மாகாண சச்சரவுகள் போன்ற உள்நாட்டுப் பகை சக்திகள் இன்னும் ஒழிக்கப் படவில்லை. இதற்குள் எவ்வளவுதான் நியாயமான காரணங்களிருப்பினும், வெளிநாட்டுப் பகையை ஏற்படுத்திக் கொள்வது விரும்பத்தக்கதல்ல. ஆனால், “நடுவு நிலைமை” என்பதற்குக் கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்ப்பது என்பது பொருளல்ல. எப்படியும் உலக யுத்தம் ஏற்படாத வகையில் இந்தியா பாடுபட்டால் தான் அதன் நடுநிலைமைக்குக் கௌரவம் உண்டு. உலகப்

போர் மூளுமானல், அதுவும் ஆசியாவில் ஆரம்பமாகு மானல், இந்தியா விரும்பாவிட்டாலும் அதன்மீது போர் திணிக்கப்படுவது திண்ணம்.

ஆகவே, இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் உலகப் போருக்கு எதிரான கருத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். தவறு அமெரிக்காவிடமிருப்பினும் சரி, ரஷ்யா விடமிருப்பினும் சரி, அதைப் பற்றித் தீர்ப்புக் கூறுமிடம் போர்க்களமல்ல என்பதைச் சண்டையிடும் நாடுகளுக்கு இந்தியா உணர்த்தி வைக்கவேண்டும். கடந்த மகாயுத்தத் தின் போது காந்தியடிகள் எந்த அகிம்சை நெறியைக் கடைப்பிடிக்கும்படி நம்மைத் தூண்டினரோ, அதே நெறியை இன்றும் நாம் கடைப்பிடிப்போமாயின், இன்னெரு உலக யுத்தம் நேராமல் தடுக்கலாம். அப்படி நேர்ந் தாலும், இந்தியா நடுநிலைமையுடன் சமரசக் கொடியை உயர்த்திப் பிடிக்குமாயின் யுத்தத்தின் காலத்தைக் குறுக் கலாம். அதனல் ஏற்படும் கொடுமைகளையும் குறைக்க லாம்.

வடக்கெல்லையில் தமிழர் வெற்றி

சித்தூர் ஜில்லாவின் தென் பகுதி தமிழ் நாட்டைச் சேர்ந் தது. அங்கு வாழ்வோரில் பெரும்பாலோர் தமிழர். தமிழே அவர்கள் தாய்மொழி. எனவே, தென் சித்தூர் தமிழ் மாணவர் கள் தமிழ் மூலமே கல்வி கற்க உரிமை பெற்றிருக் கின்றனர். ஆனல், சித்தூர் ஜில்லா போர்டு தலைவர் திரு. செங்கல்வராய நாயுடு, இந்த உரிமைக்கு உலைவைக்கப் பார்த் தார். ஜில்லா போர்டு பள்ளி களில், தமிழ் மாணவர்களுக் கென்று தனி வகுப்புகள் நடத்தக் கூடாதெனச் சுற் றறிக்கை விடுத்தார்.

"இரு மொழி பேசும் மக்கள் வாழும் எல்லைப் பிரதேசங்களில் பிரதேச மொழி எதுவானலும் அவரவர் தாய் மொழியிலேயே கல்வி கற்பிக்கப்பட வேண்டும்" எனப் புதிய அரசியல் தெளி வாகக் கூறுகிறது. "பத்துக்குக் குறையாத மாணவர்கள் தமிழ் கற்க முன் வந்தால், தமிழ் வகுப்பு கட்டாயம் வைத்தாக வேண்டுமென்பது சென்னை அர சினரின் ஆணை." ஆனல், ஆதிக்க வெறி பிடித்தலையும் ஆந்திரர் களின் அறிவில் இந்த உண்மை கள் படவில்லை. ஜஸ்டிஸ் கட்சி தென்னட்டை ஆண்ட நாளில் சித்தூர் ஜில்லாவில், தமிழ்ப் பள்ளிகள் அடியோடு எடுக்கப் பட்டு விட்டன. அதுமுதல் ஜில்லாவின் எல்லாத் துறைகளி லும் தெலுங்கு ஆதிக்கம் பெற்று விட்டது. நீதிமன்ற நடவடிக்கை, பத்திரப் பதிவு, பஞ்சாயத்து நிர்வாகம், பள்ளிக்

கூடப் படிப்பு ஆகிய எல்லாவற்றிலும் தெலுங்கு மொழி ஆதிக்கம் செலுத்தி வருகிறது. எல்லையோரத்தில் தமிழை அழிக்கும் இந்த அநீதிகள் நடந்து கொண்டிருந்தும் தமிழ் நாட்டுத் தலைவர்கள் ஏகமனதாக இதைக் கண்டிக்கவில்லை. ஆகவே, இங்குமங்குமாக ஒரு சில தெலுங்குப் பள்ளிகளில் நடத்தப்பட்டு வந்த தமிழ் வகுப்புகளையும் எடுத்துவிடத் துணிந்தார் ஜில்லா போர்டு தலைவர். நல்ல வேளையாக சித்தூர் தமிழர்கள் புத்துணர்ச்சி பெற்றுப் போராடத் துவங்கினர். கல்வி அமைச்சரைப் பேட்டி கண்டு ஜில்லா போர்டு தலைவரின் போக்கைத் திருத்துமாறு வேண்டுகோள் விடுத்தனர்; வேண்டுகோள் வெற்றி பெற்றது. கன்னித் தமிழை அழித்தே தீருவதெனக் கங்கணம் கட்டிப் பாடுபட்ட ஜில்லா போர்டு தலைவர் இறுதியில் பணிந்து கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. மறு உத்தரவு வரும் வரையில், ஜில்லா போர்டு பள்ளிகளில் தமிழ் வகுப்புகள் எடுக்கப்படக் கூடாதென அரசாங்கத்தார் ஆணை அனுப்பியுள்ளனர். சித்தூர் தமிழர்களின் தாய் மொழிப் பற்றை மனமாரப் பாராட்டுகிறோம்.

ஆனால், ஒரு எச்சரிக்கை. ஜில்லா போர்டுகளில், தமிழ் மாணவர்களை அனுமதிக்க மறுக்கக் காரணம் என்ன? அங்கு, தமிழ் வாழ்ந்தால், தமிழ் உணர்ச்சி வலுத்தால் திருப்பதிக்குத் தெற்கேயுள்ள தமிழ்ப் பகுதிகள் தமிழ் நாட்டோடு சேர்ந்து விடும் என்ற அச்சமே யாகும். ஆகவே, சித்தூர் தமிழர்கள் இந்தத் தற்கால வெற்றியோடு அமைதி கொண்டு விடாமல், வடக்கெல்லை மீட்சிப் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டும். எங்கெல்லாம் தமிழ்ப் பள்ளிகள் தேவையோ, அங்கெல்லாம் உடனடியாக பள்ளிகளை அமைக்குமாறு கிளர்ச்சி செய்ய வேண்டும்.

படித்த தமிழர் ஒவ்வொருவரும் படிக்காத தமிழர்களுக்கு தமிழ் கற்பிக்கும் பணியில் ஈடுபட வேண்டும். சித்தூர் தமிழர்கள் தமிழ் எழுத்துக்களை அறிந்திருந்தால் மட்டும் போதாது. பண்டைத் தமிழர்களின் எண்ணங்களை அறிவிக்கும் இலக்கியங்களையும் கற்க வேண்டும். தமிழ்ப் புலவர்களின் - தமிழ்த் தலைவர்களின் திருநாட்கள் போன்ற பெருநாட்களைக் கொண்டாடி நாள் தோறும் வீடுகளிலெல்லாம், வீதிகளிலெல்லாம் தமிழ் மணம் கமழச் செய்ய வேண்டும்.

ஆதிக்க வெறி பிடித்த ஆந்திரர்களை எதிர்த்து, "ஆதிக்க வாதிகளே! திருப்பதி மலைக்கு அப்பால் செல்லுங்கள்!" என்று ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும். தமிழ் நாட்டாரின் - தமிழரசுக் கழகத்தாரின் உதவி சித்தூர் தமிழர்களுக்குக் கிடைத்து வரும் என்பதில் ஐயமில்லை.

ஃ

"தமிழ் முரசு"

ஆண்டு சந்தா ரூ. மூன்று

ஃ

நாட்டு நடப்பு



கட்டபொம்மன் புகழ் வாழ்க !

இந்திய விடுதலைப் போர் வரலாற்றைப் பாஞ்சாலங் குறிச்சியில் கட்டபொம்மன் நிகழ்த்திய புரட்சியிலிருந்து துவக்க வேண்டுமென 'முரசு' வற்புறுத்தியிருந்ததை அன்பர்கள் அறிவர். நமது கோரிக்கையை ஆதரித்து தமிழரசுக் கிளைக் கழகங்களும், தமிழ்க் கழகங்கள் பலவும் மத்திய அரசினருக்கு மனுக்கள் அனுப்பின. இதன் விளைவாக, பொள்ளாச்சி தமிழரசுக் கழகத்தாருக்கு மத்திய அரசினர் அனுப்பியுள்ள பதிலில், "இந்திய விடுதலைப் போர் வரலாற்றில் கட்டபொம்மன் புரட்சியும் இடம் பெறும்" எனக் குறிப்பிட்டுள்ளனர். இச்செய்தி மகிழ்ச்சிக்குரியதே. என்றாலும், "இந்திய விடுதலைப்போர் வரலாறு, கட்டபொம்மன் புரட்சியை ஆரம்பமாகக் கொண்டு எழுதப்படும்- அப்புரட்சியின் முக்கிய அம்சங்கள் நன்கு விவரிக்கப்படும்" என்று திட்டமாகக் கூறப்பட்டாலொழிய, நாம் ஆறுதலடைவதற்கில்லை. அந்தத் தெளிவான வாக்குறுதியைப் பெற தமிழ்நாட்டார் - தமிழரசுக் கழகத்தார் மேலும் முயலவேண்டும். நமது கிளர்ச்சி ஓரளவேனும் வெற்றி பெற்றதற்குக் களிப்படைகிறோம். இந்த வெற்றிக்கு வேலை செய்த தமிழரசுக் கிளைக் கழகங்களுக்கும், பிற கழகங்களுக்கும் நமது நன்றி. மற்றும், கயத்தாறில் கட்டபொம்மன் உடல் அடக்கம் செய்யப்பட்ட சமாதியைப் பாதுகாத்து அதை வீரவழிபாட்டுத் தலமாகச் செய்ய வேண்டுமென சென்னை அரசினரைத் தமிழரசுக் கழகத்தார் கோரியிருந்தனர். அந்தக் கோரிக்கை அங்கீகரிக்கப் பட்டதாகவும், விரைவில் ஆவன செய்யப்படுமென்றும் அரசியலார் அறிவித்துள்ளனர். தமிழ் வீரனைக் கௌரவிக்க இசைந்த அரசினர்க்கு எமது நன்றி.

அம்பேத்கார் ஆரவாரம்

டாக்டர் அம்பேத்கார் இந்திய அறிஞர்களில் ஒருவர். காங்கிரஸ் விடுதலைப் போரிலீடுபட்ட காலத்தில் அதற்கு விரோதமாக வேலை செய்தவர். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உயர் சாதியினர் இழைத்து வரும் கொடுமை காரணமாகவே அவ்வறிஞர் தவறான அரசியல் பாதையில் செல்லவேண்டியவரானார். தாழ்த்தப்பட்ட மக்கள் அத்தனை பேரும் இஸ்லாம் மதத்தில் சேர்ந்துவிட வேண்டும் என்று கூட ஒரு காலத்தில் உபதேசம் செய்தார். ஜனாப் ஜின்னா பாக்கிஸ்தான் கோரியது போன்று, டாக்டர் அம்பேத்கார் ஆதித்திராவிடஸ்தான் கோரியதுமுண்டு. ஆனால், இதெல்லாம் இந்தியா விடுதலை பெறும் முன்பு அவர் இருந்த நிலை. விடுதலை பெற்ற இந்தியாவில் காங்கிரஸ் தலைவர்கள் டாக்டர் அம்பேத்காரின் கடந்த காலச் செயல்களை மறந்து அவரைச் சட்ட மந்திரியாக்கினர். கருணையாலல்ல; கடமையைச் செய்யவேண்டும் என்ற கா

ணத்தால். ஆனால், டாக்டர் அம்பேத்கார் தலைமையிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் பெடரேஷன், காங்கிரசுக்கு எதிராக போர்முரசு கொட்டப் புறப்பட்டிருக்கிறது. போதாக்குறைக்கு டாக்டர் அம்பேத்காரும் இந்து மதத்துக்கு எதிராக புத்த மதத்தில் சேரும்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உபதேசம் செய்கிறார். இலங்கை புத்த மதவாதிகள் மாநாட்டில் அவர் நிகழ்த்தியுள்ள சொற்பொழிவு பலமாகக் கண்டிக்கப்படுகிறது. டாக்டர் அம்பேத்கார் இந்து மதத்தைத் துறப்பது பற்றியோ புத்த மதத்தில் புகுவது பற்றியோ நாம் கவலை கொள்ளவில்லை. மதம் மனிதனின் தனிப்பட்ட விஷயம். ஆனால், தலைவர் மதம் மாறியவுடனே தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோரும் மதம் மாறவேண்டும் என்று எதிர்பார்ப்பது அறிவுடைமையல்ல. புத்த மதம் உலகம் முழுவதும் பரவிவிட்டால், போர் என்பதே இல்லாமல் போய்விடும் என்கிறார் டாக்டர் அம்பேத்கார். சீனாவும் ஜப்பானும் புத்த மதத்தைப் பின்பற்றும் நாடுகள் தான். அப்படியிருந்தும், அந்த நாடுகளுக்கிடையே கடுமையான போர் நடந்ததைக் கண்டோம்.

சிங்களவர்கள் புத்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் தான். அப்படியிருந்தும், இந்து மதத்தைப் பின்பற்றும் இலங்கைத் தமிழர்களிடம் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்பதை உலகம் அறியும்.

பர்மா புத்த மத நாடு தான். ஆனால், அங்கே இந்தியத் தமிழர்களின் உடைமைக்கும், உயிருக்கும் இழைக்கப்பட்டு வரும் அநீதிகள் அம்பேத்கார் அறியாததல்ல. இந்த அனுபவங்களுக்கு மாறாக, புத்த மதத்தில்தான் நீதியும் நெறியும் நிறைந்திருப்பதாக அம்பேத்கார் நம்புவாரானால் அதை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், தம்மைப் போன்றே தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோரும் நம்பவேண்டும் என்று கோருவது அறிவை அவமதிப்பதாகும். அதிலும், இந்திய அரசில் மிகமிகப் பொறுப்பான பதவி வகிக்கும் ஒருவர் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும் கிளர்ச்சிகளில் ஈடுபடுவது நாட்டுக்கு நன்மை செய்வதாகாது.

மலேயாவில் தமிழர் பிரதிநிதி

மலேயா தீபகற்பம் உலக மக்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது. கிழக்காசியாவில், உலக யுத்தம் உருவாகுமோ என்று அச்சப்படும் தருணத்தில், மலேயாவில் உள்நாட்டுக் கலகம் நடந்து வருகிறது. மலேயாவின் மக்கள் தொகை 50 லட்சம். இதில் 9 லட்சம் பேர் இந்தியர். அவர்களிலும் பெரும்பாலோர் தமிழர். ஆகவே, உலகப் போரின் மிரட்டலாலும் உள்நாட்டுக் கலகத்தாலும் மலேயா வாழ் தமிழர்களின் நலன்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன. வீரன் கணபதி தூக்கில் மாண்டதும், சாம்பசிவம் தூக்கு தண்டனை பெற்று துக்கப்பட்டதும் இதற்குச் சரியான சான்றுகள்.

மலேயாத் தமிழர்களின் மனக் கவலையைப் போக்க

சிலம்பு காட்டும் செந்நெறி

—ம. பொ சி.

சிலப்பதிகாரம், செந்தமிழிலுள்ள ஓர் சிறந்த காவியம். சேரநாடு, சோழநாடு, பாண்டி நாடு என மூன்று நாடுகளாகப் பிரிந்து கிடந்த தமிழகத்தை ஒரே நாடாகப் பிணைத்துக் காட்டிய பெருங் காவியம் சிலப்பதிகாரம். "நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும் தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாடு" எனத் தமிழகத்தின் எல்லைகளை வரம்பிட்டுக் காட்டியதும் சிலப்பதிகாரமே.

"நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்" என்றார் பாரதியார். "சித்திரச் சிலப்பதிகாரம்" என்றார் நாமக்கல் கவிஞர். ஆம்; பின்னே தோன்றிய புலவர்களெல்லாம், சிலப்பதிகாரத்தின் சிறப்பைப் போற்றிப் புகழ்ந்தனர். சிலம்பு காட்டும் செந்நெறியே இந்தச் சிறப்புக்கெல்லாம் காரணமாகும்.

தேசீய காவியம்

சிலப்பதிகாரம் சமய காவியமன்று; சாதிகளுக்கும் சமயங்களுக்கும்அப்பாற்பட்ட **தேசீயக் காவியம்.** பிள்ளையாருக்குத் துதி பாடிக் காவியத்தைத் துவக்கினர் சமயப் புலவர்கள். சிலப்பதிகாரக் கவிஞரோ, காவி

(முன் பக்கத் தொடர்ச்சி)

டில்லி அரசாங்கத்தார் அவசரப்படுவதாகத் தெரியவில்லை. மலேயாவில் திரு. திவி என்பவர் இப்போது இந்தியத் தூதுவராக இருந்து வருகிறார். அவருக்கு பதில் வேறொரு தூதுவரை அங்கு அனுப்பப் போவதாக அறிகிறோம். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, புதிய தூதுவர் ஒரு தமிழராகத்தான் இருக்க வேண்டுமென்று மலேயாத் தமிழர்கள் கிளர்ச்சி செய்து வருகின்றனர். அவர்களது கிளர்ச்சியை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். தமிழகம் சுயநிர்ணய உரிமையுள்ள ஒரு சுதந்தர நாடாகமிலிருங்கால் அயல்நாட்டு தமிழர்களைப் பாதுகாக்கும் உரிமை தமிழரசிடமே இருக்கும். அந்தக் காலம் வரும் வரை, தமிழ் மக்கள் குடியேறியுள்ள மலேயா, பர்மா, இலங்கை போன்ற நாடுகளில் தமிழர்களையே இந்தியப் பிரதிநிதிகளாக அனுப்பும்படி கிளர்ச்சி செய்ய வேண்டும். இந்தக் கிளர்ச்சியை வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் மட்டும் நடத்தினால் வெற்றி கிடைத்துவிடாது. இந்தியத் தமிழகத்திலும் நடைபெற வேண்டும். தமிழர் வாழும் வெளிநாடுகளில் தமிழரையே பிரதிநிதிகளாக அனுப்புவதில் சட்டச் சிக்கலோ, சம்பிரதாய முரண்பாடோ ஒன்றுமில்லை. ஆகவே, டில்லி அரசாங்கத்தார் மலேயாத் தமிழர்களின் கோரிக்கையை ஏற்று அங்கு ஒரு தமிழரையே பிரதிநிதியாக அனுப்புவதோடு தமிழர்கள் குடியேறியுள்ள பிறநாடுகளுக்கும் அதே முறையைக் கையாள வேண்டியது அவசியமாகும்.

ரிக்கு வாழ்த்துக் கூறி, தமிழகத்தின் நீர்வளத்தை நினைவூட்டுகிறார்; பூம்புகாரைப் போற்றி, செந்தமிழ் நாட்டின் செல்வச் சிறப்பை விளக்குகிறார்; திங்களையும் ஞாயிறையும் போற்றி, இயற்கையின் பெருமையை எடுத்துக் காட்டுகிறார். திங்களின் தண்ணொளியும் ஞாயிற்றின் வெப்பமும், இன்ன சாதியார் இன்ன சமயத்தார் என்று வேற்றுமை பாராமல் எல்லோருக்கும் வீசுகின்றன. அதேபோன்று செந்தமிழ் வேந்தரின் வெண்கொற்றக் குடை, ஏழையென்றும் பணக்காரரென்றும் பாராது எல்லோருக்கும் நிழல் தந்து காக்கிறது. அவரது ஆக்ஞா சக்கரம், அநீதியை அழித்து நீதியை நிலைநாட்டுகிறது. என்றென்றும் மாறாத இந்த உண்மைகளைச் சிலப்பதிகாரத்தின் துவக்கத்திலேயே நாம் மறக்க முடியாதவாறு உணர்த்துகிறார் இளங்கோவடிகள். சிலப்பதிகாரம் தேசியக் காவியம்தான் என்பதற்கு இவற்றைவிட சான்று வேறென்ன வேண்டும்?

கன்னித் தமிழில் சிலம்பொன்றேயன்றி, வேறு காவிய நூல்கள் பலவுண்டு. அவையனைத்தும் வடமொழிக் காவியங்களின் வழி நூற்களேயன்றி, தமிழ்மொழியில் தோன்றிய முதல் நூற்களன்று. ஆனால், சிலப்பதிகாரமோ தமிழில் தோன்றிய முதற் காவியம். சிலம்பு காட்டும் செந்நெறியும் செந்தமிழ் நாட்டார் வழி வழி கடைப் பிடித்து வந்த நன்னெறியேயாகும். வடமொழி வழிவந்த தமிழ்க் காவியம் எதுவாயினும் சரி; அதில் கதாநாயகனாகட்டும், அல்லது கதாநாயகியாகட்டும்; கடவுளின் அவதாரமாகவே வருணிக்கப்படுவர். காவியத் தலைவர்களும் தலைவிகளும் தேவலோகத்தில் பிழை செய்து, அதற்குப் பிராயச் சித்தம் தேடப் பூலோகத்தில் பிறந்தவர்களாகவே இருப்பார்கள். ஆனால், சிலப்பதிகாரத் தலைவியாம் கண்ணகி தேவி, விண்ணுலகில் பிழை செய்து மண்ணுலகில் பிறந்தவளல்லள். நீங்களும் நானும் பிறந்த விதிப்படித்தான் கண்ணகியும் பிறந்தாள். வேறெந்தக் காவியத்திலும் காணமுடியாத இந்தச் செந்நெறியை - அறிவுக்குப் பொருந்தும் நன்னெறியைச் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம்.

பெண்ணுரிமை பேசும் பேரிலக்கியம்

சிலப்பதிகாரம், தமிழ் மொழியிலும் தமிழ் வழியிலும் எழுதப்பட்ட காவியமாகும். பெண்ணொருத்தியைத் தலைவியாகக் கொண்டு செந்நெறி போதிக்கும் காவியம் தமிழில், சிலப்பதிகாரமின்றி வேறில்லை.

இளங்கோ காலத்தில், ராம காவியம் தமிழில் எழுதப்படவில்லை. என்றாலும், இராமனைப் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றிருக்கின்றன. ஆய்ச்சியர் குரவையில்,

முவுலகும் ஈரடியான்
முறைநிரம்பா வகைமுடியத்

தாவியசேவடிசேப்பத்
தம்பியொடுங் கான்போந்து
சோவரனும் போர்மடியத்
தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத
செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத
செவியென்ன செவியே

என வரும் பாடலே இதற்குச் சான்று. சிலப்பதிகாரத்தின் வேறு பல காதைகளிலும் சீதையின் காதலனைப் பற்றிய செய்திகள் இடம் பெற்றிருக்கின்றன. இதிலிருந்து இளங்கோவடிகள் வால்மீகியின் ஆதிகாவியத்தை அறிந்திருந்தார் எனக் கூறலாம். அப்படியிருந்தும், ராம கதைக்கு மாறுபட்ட போக்கிலேயே சிலம்பைச் சித்தரித்திருக்கிறார் சேரநாட்டுப் புலவர். ராம காவியத்தின் சிறப்பனைத்தும் இராமரைச் சேர்ந்ததே யன்றி, சீதைக்குரியதன்று. இராமரின் புகழ் விளங்க சீதை ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறாள். அக்காவியத்திற்கு இராமர் பெயர் சூட்டப்பட்டிருப்பதே இதைப் புலப்படுத்தும். பெண்ணைக் காவிய நாயகியாக்குவது வடமொழியாளரின் மரபன்று. பெண், பாவத்தின் சின்னம்; ஆணின் சொற்படி இயங்க வேண்டிய ஆடற் கருவி என எண்ணினர் அக்கால வடமொழிப் புலவர்கள். ராமாயணத்தில் காடு செல்லப் புறப்படும் இராமர், தன்னோடு வர விரும்பும் சீதையையும் அழைத்துச்செல்ல மறுக்கிறார். ஆனால், சிலப்பதிகாரத்தில் நாடு விட்டு நாடு செல்ல விரும்பும் கோவலன் கண்ணகியை 'எழு' எனக் கூறி இட்டுச் செல்கிறான். மண்மகள் அறியாத வண்ணச் சீறடியுடையாள் கண்ணகி தேவி என அறிந்திருந்தும், காட்டு வழியே கூட்டிச் செல்லத் துணிந்தான் கோவலன்.

இராம கதையில், அரசவையில் வீற்றிருக்கும் தயரதனைக் காண்கிறோம். ஆனால், அரசனின் பக்கத்திலே அரசியார் வீற்றிருக்கவில்லை. ஆம்; வடநாட்டவரின் பண்புப்படி அரசியார் வீற்றிருக்க வேண்டிய இடம் அரசவை யன்று; ஆடவர்கள் காணாத அந்தப்புரமே யாகும்.

சிலப்பதிகாரத்தில் வழக்குரை காதையில், கூடற்பதியின் வேந்தன் கொலு வீற்றிருக்கிறான். அவனது அருகில் அரசமாதேவியும் அமர்ந்திருக்கக் காண்கிறோம். அது மட்டுமன்று; பாண்டியன் அரியணையிலிருந்து உருண்டு வீழ்ந்து உயிர் விட்ட போது, அரசமாதேவியும் உயிர் நீத்த அதிசயத்தைப் பார்க்கிறோம்.

தமிழ் நாட்டு வேந்தர் அரசியைப் பக்கத்தில் வைத்திருந்தது அழகுக்காக அன்று. அவசியம் நேர்ந்தபோது, அவளது ஆலோசனையைக் கேட்கவே யாகும். காட்சிக் காதையில், கண்ணகி மறைந்த செய்தியை மலைக் குறவர்களால் அறிகிறான் செங்குட்டுவன். அவ்வீராங்கனை மதுரையில் நிகழ்த்திய புரட்சியை விளக்குகிறார், புலவர் சாத்தனார். செய்தியறிந்த செங்குட்டுவன், தன் அருகிலிருந்த சேரமாதேவியை நோக்கி, "மன்னன் உயிர் நீத்த அக்கணமே தன்னுயிர் நீத்த மதுரையரசி; கொடுங்கோலே

அழித்துச் செங்கோலை நிலைநாட்டிய கண்ணகி தேவி; இவ்விருவரில் என் சேரமாதேவியின் சிந்தையைக் கவர்ந்தவள் யார்?'' எனக் கேட்கின்றான். "மண்ணகம் அறியாத புரட்சியை விளைவித்த கண்ணகி தேவிக்கு கோயில் எடுப்போம்; அவளைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபடுவோம்'' என்று, வினா விடுத்த வேந்தனுக்கு விடையளித்தாள் சேர நாட்டரசி.

ஆம்; அரசராயினும் ஆண்டியாயினும், மனைவியரை அந்தப்புரத்தில் அடைத்து வைக்கும் அடிமைத் தனத்தைத் தமிழ் நாட்டார் கடைப்பிடித்ததில்லை. சிலப்பதிகாரத்தில், மதுரைக் காண்டத்திலும் சரி, வஞ்சிக் காண்டத்திலும் சரி; அரசியர் இல்லாமல் அரசர்கள் அவையிலிருந்ததில்லை.

ஆம்; அரண்மனையில் காதலி; அரசவையில் மந்திரி! இதுவே அக்கால தமிழ் அரசிகளின்நிலை. ஒன்றுக்குமேற்பட்ட பெண்களை மனைவியராகக் கொள்வதும், தமிழ் வேந்தர்களின் மரபன்று!

இவற்றிலிருந்து சிலம்பு காட்டும் செந்நெறி தமிழருக்கே யுரிய தனி நெறி என்பதை அறியலாம்.

தமிழகத்தில் இன்று ஓர் வழக்கத்தைக் காண்கின்றேன். திருமண அழைப்பிதழில், மணமகள் பெயர் முன்னே இராது: இருக்கக் கூடாதென்பதும் நம்பிக்கை; இருந்து விட்டால், அது மணமகனை இழிவுபடுத்தியதாகவும் எண்ணுவர் மக்கள். ஆனால், சிலம்பு காட்டும் செந்நெறி இதற்கு நேர்மாறானது. சிலப்பதிகாரக் காதலர்களின் திருமணத்தைக் கூறுமிடத்து, கண்ணகியை முன்னேயும், கோவலனைப் பின்னேயும் அறிமுகப் படுத்துகிறார் இளங்கோவடிகள்.

இக்காலத்தில் மேடைப் பேச்சாளர்கள், "சகோதரிகளே, சகோதரர்களே!'' என்று கூறக் கேட்கிறோம். இது "லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்'' எனப் பெண்களை முற்படக் கூறிப் பெருமைப் படுத்தும் ஆங்கிலேயர் வழக்கத்தை யொட்டியதாக எண்ணப்படுகிறது. ஆனால், சிலம்பு காட்டும் செந்நெறியை அறிந்தார்க்கு இது தமிழ் நெறியே என்பது புலப்படும். 'ஊர்சூழ் வரி'யில் கணவனை இழந்து கலங்கியழும் கண்ணகி, "நீதியைக் கொன்ற நெடுஞ்செழியன் ஆட்சியில், பெண்டிரும் உண்டுகொல், பெண்டிரும் உண்டுகொல்'' எனப் பெண்களைக் கூவி அழுத பின்னரே, சான்றோரையும் தெய்வத்தையும் கூப்பிட்டு அழுதாள். கூடற்பதியை எரிப்பதற்கான காரணத்தைக் கூறும் போதும், "நான்மாடக் கூடல் மகளிர்காள் கேளுங்கள்!'' என மகளிருக்கு உரைத்த பின்னரே மைந்தருக்கும், வானக் கடவுளர்க்கும் மாதவர்க்கும், கூறினாள். சிலம்பு காட்டும் இந்த செந்நெறியைத்தான் அதைப் படித்தறியாத ஆங்கிலேயரும் பின்பற்றுகின்றனர். ஆனால், தமிழ் நாட்டவராகிய நாமோ, சிலம்பைப் படைத்திருந்தும் அது காட்டும் செந்நெறியை உணராக் காரணத்தால், "சகோதரிகளே, சகோதரர்களே!'' என்பது புதுநெறி

யென்றும், ஆங்கிலேயர் கற்றுத் தந்த புரட்சிநெறி யென்றும் பேசித் திரிகிறோம். சிலப்பதிகாரத்தில் மற்றொரு சிறப்பைக் காண்கிறோம். வேறு எந்தக் காவியத்தை நோக்கினாலும், காவியத் தலைவன் (அங்கெல்லாம் தலைவி கிடையாதல்லவா?) கருவுற்றதி லிருந்தே கதை துவங்கும். அவதாரப் படலத்திலிருந்து பல படலங்களைத் தாண்டிய பின்னரே கதையின் கருப்பொருளை அணுகுவோம். இந்தப் படலங்களைப் படித்து முடிப்பதற்குள் நமது சடலம் ஓய்ந்துவிடும். இதனால் காவியத்தைப் படிக்க விரும்புகிறவர்கள்கூட, அவதாரப் படலத்தைத் தாண்டுவதற்குள் அலுத்து நிறுத்தி விடுவர். சிலப்பதிகாரத்திலோ, காவியத் தலைவியை ஆரம்பத்திலேயே திருமணப் பந்தலில் அறிமுகப் படுத்திவிடுகிறார் இளங்கோவடிகள். ஆற்றுப் படலம், நாட்டுப் படலம், நகரப் படலம், அரசியற் படலம் ஆகிய அனைத்தையும் இருபத்திநான்கு வரிகளிலேயே முடித்துவிட்டு கதையின் முக்கிய பகுதிக்கு வந்து விடுகிறார். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் இலக்கண முறையை மிகத் திறமையாகக் கையாண்டிருக்கிறார் இளங்கோவடிகள்.

கற்பனை, அலங்காரம், வருணனை ஆகியனவெல்லாம் காவியத்திற்குத் தேவையானவையே. அவை சிலப்பதிகாரத்திலும் நிறைய உண்டு. ஆயினும், கதையை மறந்து கற்பனையிலும் அலங்காரத்திலும், வருணனையிலும் மயங்க வைக்கும் அளவுக்குப் போகவில்லை இளங்கோவடிகள். காவியத்திற்கு அழகு செய்வது காதலர்களின் முதல்சந்திப்பாகும். முன்பின் அறியாத ஒருவனும் ஒருத்தியும் எதிர்பாராதவாறு சந்தித்துக்களிப்பதும், திட்டமிட்டபடி சந்திக்க முடியாதபோது வருந்துவதும் 'களவியல்' எனப்படும். ஆனால், சிலப்பதிகாரத்தில், கண்ணகியும் கோவலனும் முதல் முதல் சந்திக்குமிடம் நந்தவனமல்ல; திருமணப் பந்தலேயாம். கண்ணகி - கோவலன் திருமணம் காதல் மணமல்ல; கற்பு மணமேயாகும். ஆகவே, காதலனைக் காணாது காதலி வருந்துவதும், காதலியைக் காணாது காதலன் வருந்துவதுமான காதற்சுவையைக் 'கானல் வரி'யில் தந்து காவியத்தை அழகு படுத்துகிறார் இளங்கோவடிகள்.

மறைந்து கிடக்கும் உண்மை

கோவலன், மாதவியை விட்டுப் பிரிவதற்கு 'கானல் வரிப்' பாட்டே காரணம் என்பர் கற்றறிந்த புலவோர்; ஆனால், அது துணைக் காரணமே யொழிய, முதற் காரணமன்று.

கானல் வரிக்கு முன்னுள்ள 'கடலாடு காதை'யில், மாதவி இந்திர விழாவில் நடனமாடுகின்றாள். அந்த நடனத்தைக் கண்டு ஆடவர்களெல்லாம் ஆனந்த மெய்துகின்றனர். தனக்கேவுரிய ஒருத்தி பிற ஆடவருக்கும் ஆனந்தமளிப்பது கண்டு கோவலன் வெறுப்புக் கொள்கிறான். மாதவியின் ஆடற்கலை, எல்லோரும் கண்டு களிக்கக் கூடியதே. என்றாலும், அவளது அங்கங்களின் அழகைக்கண்டு களிக்கக்கூடிய உரி

மைபெற்றவன் கோவலன் ஒருவனே யல்லவா? ஆகவே, மாதவியின் ஆடலோடு அவளது அழகையும் அங்கங்களின் அமைப்பையும் எல்லோரும் கண்டு களிப்பது கோவலனுக்கு எரிச்சலை மூட்டியது. பரத்தை ஒருத்தியைக் காதலியாகக் கொண்டதன் பலனன்றோ இது என எண்ணி அவளோடு ஊடல்கொள்கிறான் கோவலன்.

ஆடலும் கோலமும்
அணியுங் கடைக்கொள
ஊடற் கோலமோ(டு)
இருந்தோன் உவப்ப
கூடலும் ஊடலும்
கோவலற் களித்து

என்ற வரிகளே இதற்குச் சான்றாகும்.

மாதவியின்பால் வெறுப்பு கொண்டதன் விளைவாக, கண்ணகியின்பால் விருப்பம் தோன்றுகிறது கோவலனுக்கு. பிற ஆடவரும் கண்டு களிக்க ஆடல் புரியும் மாதவிக்கும், கோவலனன்றி பிறிதொரு ஆடவனின் நெஞ்சு புகாத கற்பினளாகிய கண்ணகிக்கும் உள்ள வேற்றுமையை உணருகிறது கோவலனின் உள்ளம். இதைக் கானல் வரியில் வெளிப்படுத்துகிறான் கண்ணகியின் காதலன்.

"காவிரிப் பெண்ணே! உனக்கேயுரிய சோழ மன்னன் கங்கை என்னும் நங்கையைப் புணர்ந்தாலும், நீ அவனை வெறுக்கின்றாயில்லை. கணவன் தன்னைப் பிரிந்த காலத்திலும் அவனை வெறுக்காதிருப்பதே பெண்ணினத்தின் கற்பு நெறி என்பதை உன்னால் அறிந்தேன். நீ வாழ்வாயாக!" எனக் கூறுமிடத்து காவிரி என்ற பெயரால் கண்ணகியின் கற்பின் பெருமையையே போற்றுகிறான் கோவலன்.

கோவலன் பாடும் வரிப் பாடலில், 'திங்கள் மாலை வெண்குடையான்' என்று துவங்கும் முதற் பாடல், மற்றொரு உண்மையையும் நமக்கு உணர்த்திவைக்கிறது. "காவிரி நாடே! உனக்கே உரிய மன்னன் கங்கை நாட்டைக் கட்டியாண்டாலும் - அங்கேயே காலங் கழித்தாலும், அரசனில்லா நாட்டில் விளையும் அராஜக நிலையைநீ அடைகின்றாய் இல்லை. அரசனில்லாத காலத்திலும் அமைதி நிலவும் நிலமே 'நாடு' எனப்படும் என்ற உண்மையை உன்னால் அறிந்தேன். நீ வாழ்வாயாக!" என்பது அந்தப் பாடலில் பொதிந்து கிடக்கும் மற்றொரு பொருளாகும். இதை அடுத்து வரும் இரண்டு பாடல்களிலும் இதேபோன்று கண்ணகியின் கற்பையும், காவிரி நாட்டு மக்களின் ராஜபக்தியையும் சிலேடையாகச் சித்தரிக்கிறான் மாசாத்துவான் மகன். கானல் வரிப் பாடலின் கருத்தை நுட்பமாக ஆராய்ந்தால், கண்ணகியை நினைந்து வாடும் தனது உள்ளத்தின் நிலையையே உணர்ச்சி ததும்ப வெளிப் படுத்தினான் என்ற உண்மை புலப்படும். இந்த உண்மையை அறிந்து கொள்ளாத மாதவி, கோவலன் வேறொருத்தியை நினைந்து நெஞ்சுருகிப் பாடினான் என எண்ணி அவனோடு ஊடல் கொண்டாள். அந்தஊடல்தான் கோவலன் மாதவி உறவை அழித்தது.

(தொடரும்)

அரசினரின் கல்விக் கொள்கை எதிர்ப்பு

சென்னை அரசினரின் கல்வித் திட்டத்தை ஆட்சேபித்து தமிழ் நாட்டுப் பிரமுகர்களில் இருபத்திநான்கு பேர் கையெழுத்திட்டுள்ளனர். அதன் சுருக்கமாவது :

பள்ளிப் பாடத்திட்டத்தில் சென்னை அரசினர் ஒரு முடிவான கொள்கைக்கு வாராமலிருப்பது வருந்தத் தக்கது. அண்மையில் அரசினர் வெளியிட்ட கல்வித் திட்டப்படி இந்தி, சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளும் மாணவர்களுக்குக் கட்டாயப் படிப்பு ஆகிறது. ஆனால், தமிழ்மொழி கட்டாயமில்லை. தமிழுக்கு பதிலாக வட்டார மொழியையோ, இந்தியாவிலுள்ள மொழிகளில் ஒன்றையோ, அல்லது சமஸ்கிருதத்தையோ படிக்கலாம்.

பிரிட்டிஷ் ஆட்சியின்போது அவர்கள் வகுத்திருந்த கல்வி முறை காரணமாகத் தமிழ் சிறப்பிழந்தது. ஆனால் சமீப காலமாக தமிழ் மறுமலர்ச்சி பெற்றது. தமிழ் இலக்கியச் செல்வத்தின் அருமை பெருமைகளைத் தமிழர் உணரத்தொடங்கியுள்ளனர். இந்நிலையில், தமிழ் கட்டாய பாடமாக இல்லாவிடில், அதன் வளர்ச்சி குன்றும். மக்களிடையே மொழி உணர்ச்சி குறையும். இந்தி உத்தியோக மொழியாகும்போது சமஸ்கிருதம் படித்தால் இந்தியில் திறமை பெறலாம் என்ற தூண்டுதலால் மாணவர்கள் தமிழுக்கு பதிலாக சமஸ்கிருதம் படிக்க நினைப்பர். இப்படி நேர்ந்தால் தமிழ் மொழியின் கதி என்னவாகும்? இது வெறும் கற்பனையல்ல. நிச்சயமாக நேரவிருக்கும் விபத்து.

இந்தி, சமஸ்கிருத மொழிகளைக் கற்பிக்க ஏற்பாடுகள் செய்வதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால், தாய் மொழிக்குப் பதிலாக அவற்றைப் படிக்கலாம் என்ற ஏற்பாட்டை நாங்கள் ஏற்க முடியாது. வீட்டில் பேசுவதாலும், செய்தித் தாள்களைப் படிப்பதாலுமே தாய் மொழியில் ஞானம் பெற முடியுமென்று கூறுவது வியப்பைத் தருகிறது. தாய் மொழியில் திறமை பெற பண்டைய இலக்கியங்களைப் படிப்பது இன்றியமையாதது. தமிழிலுள்ள கலைச் செல்வமும், இலக்கியச் செல்வமும் மிகப் பெருமை வாய்ந்தனவாகும். அந்தச் செல்வங்கள் அழிந்து போகும்படி தமிழ் மக்கள் எந்த நாளிலும் சம்மதிக்க மாட்டார்கள்.

"குழந்தைகளின் கல்வித் திட்டத்தைப் பொறுத்தமட்டில் சச்சரவுகளை விளைவிக்கும் கருத்து வேற்றுமைகளுக்கு இடங் கொடுக்கலாகாது" என்கிறார் கல்வி இலாகா டைரக்டர். அவரது கருத்தை நாங்களும் ஆமோதிக்கிறோம். ஆனால், சச்சரவுக்கு இடங் கொடுப்பது நாங்களல்ல; தமிழ் நாட்டில் - தமிழ்க் குழந்தைகள், தங்கள் தாய்மொழியாகிய தமிழைக் கட்டாயமாகப் படிக்க வேண்டியதில்லையென்று கூறுவோரே, அதற்கான திட்டங்களைத் திணிப்போரே சச்சரவுகளை வளர்ப்போராவர். சென்னை அரசினர், முடிவான திட்டத்தைத் தயாரிக்கும்போது இவற்றை நினைவில் கொள்வார்களாக!

வள்ளுவர் வகுத்த வழி

ம. பொ. சி

திருக்குறள் பொருட்பாலில், 'இறை மாட்சி'யை அடுத்து 'கல்வி' என்னும் அதிகாரம் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத் தலைப்புக்கு விளக்கங் கூறிய பரிமேலழகர், "அரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்கவேண்டும் என்பதே கருத்து" எனக் குறிப்பிட்டுள்ளார். பரிமேலழகரின் விளக்கம் வள்ளுவரின் கருத்துக்கு பொருத்தமற்றதாகும். 'கல்வி' என்னும் அதிகாரத்தில் வரும் பத்துக் குறள்களில் எந்தக் குறளும் அரசனைக் குறிக்கவில்லை. எல்லாக் குறள்களும் கல்வியின் அவசியத்தைப் பொதுப் படையாகவே வற்புறுத்துகின்றன. 'கல்வி' என்ற அதிகாரத்தில் வரும் கருத்துக்கள் அரசனுக்கு உரித்தென்றால், அதையொட்டி வரும் கல்லாமை, கேள்வி, அறிவுடைமை ஆகிய மூன்று அதிகாரங்களும் அரசரைப் பற்றிக் கூறியனவாதல் வேண்டும். கேள்வி என்னும் அதிகாரத்தில், "கற்றிலனாயினும் கேட்க" என்கிறார் திருவள்ளுவர். நாடாளும் வேந்தன் கல்லாதவனாயிருப்பினும் கவலை இல்லை. கேள்வி ஞானமுடையவனாக மட்டும் இருந்தால் போதும் என்று வள்ளுவர் கூறுவாரா? மற்றும்,

தூங்காமை கல்வி துணிவுடைமை
இம்மூன்றும்
நீங்கா நிலனாள்பவற்கு

என்ற குறளிலேயே அரசருக்குக் கல்வி அவசியம் என்பதை திருவள்ளுவர் வற்புறுத்தி விட்டார். எனவே, மீண்டும் பத்துக் குறள்களில் அதையே பன்னிப் பன்னிக் கூறத் தேவை இல்லை. பின், இறைமாட்சியை அடுத்து கல்வி என்ற அதிகாரம் வரக் காரணம் என்ன?

அரசன் ஆற்ற வேண்டிய கடமைகளில், குடிமக்களைக் கல்வி உடையவர்களாகச் செய்தலே முதற் கடமையாகும். கல்வி கற்க வசதியற்ற - வாய்ப்பற்ற மக்களுக்கு கேள்வி ஞானம் பெறுவதற்கேனும் வசதி செய்தல் வேண்டும். இதை வற்புறுத்தவே இறைமாட்சியை அடுத்தது கல்வியையும் கேள்வியையும் வைத்தார் திருவள்ளுவர்.

அரசனுடைய கடமைகள் பலவற்றுள் தலையாய ஒன்றைச் சொல்ல வந்த பொன்முடியார் என்ற புறநானூற்றுப் புலவரும்,

நன்னடை நல்கல்
வேந்தர்க்குக் கடனே

எனக் கூறினார். பண்டைநாளில் கல்வி ஒழுக்கத்தைப் போதிப்பதாகவே இருந்தது. ஆகவே, 'நன்னடை' என்ற பெயரில் கல்வியின் பயனைக் கூறினார் பொன்முடியார்.

அரசுக்குரிய அங்கங்கள்

ஒரு அரசுக்குரிய அங்கங்கள் பல. அவற்றுள் முக்கிய

மானவை மக்கள், படை, பொருள், அமைச்சு, நட்பு, அரண் ஆகியவையாம்.

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு

என்ற குறள் இதை வற்புறுத்துகின்றது. திருக்குறள், அரசனை அரசின் அங்கங்களுள் ஒன்ருகக் கொள்ளவில்லை. ஆம்; அரசு வேறு; அரசன் வேறு என்று பிரிக்காமல், அந்த இரண்டையும் ஒன்ருகப் பிணைத்து விடுகிறது திருக்குறள். அரசருக்குரிய ஆறு அங்கங்களில் ஒன்று குறையினும் அந்த அரசு வலிமையற்றதேயாகும். 'கூழ்' என்பது பொருளையும், 'நட்பு' என்பது நேச நாடுகளையும் குறிப்பனவாகும்.

திருக்குறள் பொருட்பாலில் 'அரசியல்' என்ற தலைப்பில் அரசனுக்குரிய தகுதியையும், அவன் ஆற்றவேண்டிய கடமையையும் இருபத்தைந்து அதிகாரங்களில் தெளிவாக்குகிருர் திருவள்ளுவர். பின்னர், அரசுக்குரிய அங்கங்களை 'அங்கவியல்' என்ற தலைப்பின் கீழ் முப்பத்திரண்டு அதிகாரங்களில் விளக்குகின்ருர். அரசுக்குரிய அங்கங்களைக் கூறும் குறளில், படையை முதற்கண் வைத்தாராயினும் அதிகார வைப்பில் அமைச்சரைப் பற்றியே முதலில் விளக்குவாராயினர். ஆம்; அரசாங்கத்திற்கு அரசன் அல்லது தலைவனை அடுத்து முக்கியத்துவம் பெறுபவர் அமைச்சரே என்பதை இன்றைய அரசியவிலும் நாம் கண்டுவருகிருேமல்லவா?

சென்னை தனியரசா?

இந்தியாவில், மாகாணங்களுக்கு 'ஸ்டேட்' அதாவது 'அரசு' என்ற அந்தஸ்து கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனல், திருவள்ளுவர் கூறும் அங்கங்கள் அந்த அரசுகளுக்கு கிடையாது. இதைச் சற்று விரிவாக ஆராய்வோம்:

இந்திய குடியரசு அமைப்புச் சட்டப்படி மாகாணங்களுக்கு 'ஸ்டேட்' என்ற அந்தஸ்து கொடுக்கப் பட்டிருப்பதால் மத்திய அரசானது பல அரசுகள் கலந்த கூட்டரசு என்று ஏற்படுகிறது. அந்தக் கூட்டரசுதான் 'யூனியன்' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. ஆனல் யூனியனுக்குட்பட்ட அரசுகள் சுதந்தரமுடையவை அல்ல என்பது அரசியல் அமைப்பைப் படித்தால் விளங்கும். வள்ளுவர் வகுத்த வழிப்படி இந்தியாவிலுள்ள மாகாண அரசுகள் படை, குடி, நிதி, நட்பு, அமைச்சு ஆகிய எதிலும் பூரண அதிகாரமுடையதல்ல.

சான்ருக, சென்னை மாகாணத்தையே எடுத்துக் கொள்வோம். இம்மாகாணத்திலுள்ள மக்கள் மத்திய அரசாங்கத்தின் பிரஜைகளே யொழிய, மாகாண அரசாங்கத்திற்கு மட்டும் உரிய பிரஜைகளல்லர். அதாவது, ஒருவரைப் பிரஜையாக அங்கீகரிக்கவும், மறுக்கவும் இந்த மாகாண அரசுக்கு உரிமை இல்லை; அந்த உரிமை யூனியன் அரசுக்கே உண்டு.

ஆகவே, சென்னை அரசுக்குக் குடிமக்கள் இல்லை.

படை உடைய அரசே பலம் வாய்ந்த அரசு என்கிறது திருக்குறள். ஆனல், சென்னை அரசுக்கு தனியாக ராணுவம் வைத்துக் கொள்ள உரிமை கிடையாது. இந்தியா முழுவதுக்குமாக ராணுவம் வைத்துக்கொள்ளும் உரிமை யூனியன் அரசிடமே இருக்கிறது. ஆகவே, சென்னை அரசுக்குப் படை இல்லை.

'கூழ்' - அதாவது பொருள் உடைய அரசே அரசென்கிறது திருக்குறள். ஆனல், அரசியல் சட்டப்படி நிதி விஷயத்தில் சென்னை அரசு பூரண அதிகாரம் படைத்ததல்ல. சென்னை அரசு வரி விதிக்கக் கூடிய இனங்கள், எவை, எவை? வரி விதிக்கக்கூடாத இனங்கள் எவை, எவை? என்பதை அரசியல் சட்டம் தெளிவாகக் கூறுகிறது. சென்னை அரசு வரி விதித்துவரும் இனங்களைக்கூட, யூனியன் அரசு எந்த நேரத்திலும் பறித்துவிட முடியும். ஆகவே, நிதி விஷயத்திலும் சென்னை அரசு கதியற்றதாக இருக்கிறது.

'நட்பு' என்பது, ஒரு அரசு தன்னை அடுத்துள்ள இன்னெரு அரசோடு - அதாவது நாட்டோடு உறவு வைத்துக் கொள்வதையே குறிக்கும். ஆனல், குடியரசுச்சட்டப்படி சென்னை அரசு இந்தியாவுக்கு வெளியேயுள்ள எந்த அரசோடும் தனியாக உறவு வைத்துக்கொள்ள முடியாது. சான்ருக, பர்மா, இலங்கை, மலேயா போன்ற சென்னை வாசிகள் குடியேறியுள்ள நாடுகளோடுகூட நேரடியாக உறவு வைத்துக்கொள்ள சென்னை அரசுக்கு உரிமை கிடையாது.

அமைச்சர் குழுவை அரசுக்குரிய அங்கங்களில் ஒன்ருக்குவதன் மூலம் அதற்கொரு தனி அந்தஸ்தைத் தருகின்றது திருக்குறள். படை இல்லாமல் எப்படி ஒரு நாட்டின் பாதுகாப்பு இல்லையோ, பொருளில்லாமல் எப்படி ஒரு நாட்டின் வாழ்வு இல்லையோ, அது போன்றே அமைச்சு இல்லாமலும் ஒரு நாட்டின் அரசு இயங்க முடியாது. அதனற்ருன், அமைச்சு ஒரு அரசின் தனி அங்கமாகிறது. சென்னை அரசுக்கு அமைச்சு உண்டு; ஆனல், யூனியன் அரசு மனம் வைத்தால் நெருக்கடி நிலைமையெனப் பிரகடனப்படுத்தி அமைச்சு இல்லாமலே அரசை இயங்கச் செய்து விடலாம். வள்ளுவர் வழியில் பார்த்தால், இந்தியாவில் 'அரசு'க்குரிய எல்லா அங்கங்களும், அந்தஸ்துகளும், அதிகாரங்களும் படைத்தது யூனியன் அரசு ஒன்றேயாகும். ஆகவே, சென்னை, பம்பாய் போன்ற மாகாணங்களில் நடப்பவை அரசுகள் அல்ல. மேலிடத்தவரின் ஆதிக்கம். மாகாணங்களுக்கு 'ஸ்டேட்' அதாவது 'அரசு' என்று புதிய அரசியல் அமைப்பில் பெயர் கொடுத்திருப்பதெல்லாம் அரசியல் சாணக்கியமே அன்றி வேறன்று. திருக்குறள் காட்டும் அரசியல் நெறிப்படி இந்தியா அமைய வேண்டுமாயின்,

மாகாணங்கள் குடி, படை, பொருள், அமைச்சு, வெளி நாட்டு நட்பு ஆகிய எல்லாவற்றிலும் பூரண உரிமை பெற்றனவாக இருக்கவேண்டும். ஆனால், இந்த அதிகாரங்களை மாகாண அரசுகளே நேரடியாக அமுல் நடத்தவேண்டுமென்ற அவசியமில்லை. முக்கியமான சிலவற்றை குறிப்பாக படை, அயல்நாட்டு நட்பு ஆகியவற்றை மாகாண அரசுகள், பொது அரசான யூனியனிடம் விட்டுவைக்கலாம். அதுவும், வேண்டிய போது திரும்பப்பெறும் உரிமையுடன் விட்டுவைப்பதாயிருக்க வேண்டும்.

அமைச்சரின் தகுதி

வள்ளுவர் வழிப்படி அரசுக்குரிய எல்லா அதிகாரங்களும் அரசனிடமே குவிந்திருக்கிறது. ஆனால், அந்த அதிகாரங்களை அரசன் சார்பாக அமுல் நடத்துவதற்கு அமைச்சர்கள் தேவையாகிறது. சட்டப்படி அமைச்சர்கள் வெறும் அதிகாரிகளே யென்றாலும், சம்பிரதாயப்படி அவர்கள்தான் ஆளுவோராகின்றனர்.

சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்

அரசன் தன்னைச் சூழ்ந்துள்ள அமைச்சர்களைக் கண்ணாகக் கொண்டு, அவர்களது ஆலோசனையைப் பெறக் கடவன் என்பதே இக்குறளின் பொருள்.

அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஒழுக்கத்திற்கே முதலிடம் தருகிறார் திருவள்ளுவர். தன்மீது அன்புடையவர் என்பதற்காக மட்டும் அரசன் ஒருவரை அமைச்சராகத் தேர்ந்தெடுத்துவிடக் கூடாது. அப்படித் தேர்ந்தெடுப்பது 'அறியாமை' என்ற குற்றத்தின்பாற்படும். அன்புவேறு; அமைச்சுத் தொழில் புரியும் ஆற்றல் வேறு. அன்புடையவரெல்லாம் ஆற்றலுடையவராகவும் இருப்பரென்று நம்ப முடியுமா?

'தேருது யாரையும் தேறற்க'

"ஒருவரது அறிவு, ஆற்றல்களை ஆராய்ந்தறியாது அவரை அமைச்சராகக் கொள்ளாதே!" என்பது வள்ளுவர் கூறும் எச்சரிக்கை.

அறிவாற் சிறந்த ஒருவர், எல்லாத் துறைகளிலும் ஆற்றலுடையவராயிருப்பது அரிது. ஆகவே, அறிவிற் சிறந்தவராயிருப்பினும் அவர் எந்தத் துறையில் ஆற்றலுடையவர் என்பதை ஆராய்ந்து அந்தத் துறைக்குரிய பொறுப்பை மட்டுமே அவரிடம் ஒப்படைக்க வேண்டும். இக்கால அரசியல் பாணியில் கூறினால், தலைமை அமைச்சர் தன்னுடைய தோழமை அமைச்சருக்கு இலாக்காக்களைப் பிரித்துக் கொடுக்குங்கால், அவரவர் திறமைக்கேற்ப இலாகாக்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். சாத்திர ஞானமே அற்றவரிடம் சமய இலாக்காவை ஒப்புவிப்பதும், எந்த நாட்டிற்கு அமைச்சராக வருகிறாரோ அந்த நாட்டின் பெரும்பாலான மக்களுக்குரிய மொழியில் பயிற்சியில்லாதவரிடம் கல்வி இலாக்காவை ஒப்புவிப்பதும் முறையன்று.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

என்ற குறளும் இதற்கு எடுத்துக் காட்டு.

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல்

அமைச்சரிடம் ஒரு பொறுப்பை ஒப்புவித்தபின்னர், அதன் முழு அதிகாரத்தையும் அவருக்கு உரிமையாக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர் தனது ஆற்றல் முழுவதையும் வெளிப்படுத்த முடியும்.

கடந்த 19—5—50 அன்று பொருளாட்சியில் (பொள்ளாச்சி) தமிழரசுக் க்ழகச் சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் சொற்பொழிவாற்ற, தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சி. சென்றபோது எடுத்த படம். திரு. ம. பொ. சி. மற்றும், கழகத் தோழர்களான இரா. சுப்ரமண்யம், சோம. சாமிநாதன், நா. சஞ்சீவி, பா. க. ராசு ஆகியோரைப் படத்தில் காணலாம்,

சென்னை நகரில் ஆந்திரர் ஆதிக்கம்

—" வண்டு "

சென்னை நகரம் தங்களுடையது என்கின்றனர் ஆந்திரர்கள்.

"இல்லை ; எங்களுடையதே!" என்கின்றனர் தமிழ் மக்கள்.

ஆந்திரருக்கும் இல்லாமல் தமிழருக்கும் இல்லாமல் தனி மாகாணமாக்கி விடலாம் என்றது தார் கமிஷன்.

சென்னை நகரம், அடுத்துள்ள மாகாணத்தோடு தொடர்பு கொண்டுள்ளதால், அதை ஆந்திரத்தோடு சேர்ப்பது முடியாத காரியம் என்றது மூவர் கமிட்டி.

"சென்னை நகரம் சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் தமிழ் நாட்டின் ஒரு பகுதியேயாகும். அதைத் தமிழ் நாட்டிலிருந்து பிரிப்பதோ, ஆந்திரத்தோடு சேர்ப்பதோ, அல்லது தனி மாகாணமாக்குவதோ நீதியற்ற காரியம்" என்று ஏகமனதாகத் தீர்மானித்தது சென்னை நகராண்மைக் கழகம்.

இத்தனை எதிர்ப்புக்குப் பிறகும் "மதராஸ் மனதே" என்ற கூச்சலை ஆந்திரர்கள் விட்டார்களில்லை. சென்னையில்லாத ஆந்திர மாகாணம் வேண்டவே வேண்டாம் என்பதை சொல்லாலும் செயலாலும் புலப்படுத்தி விட்டனர் ஆந்திரத் தலைவர்கள். ஆந்திரப் பிரிவினை தடைப்பட்ட பிறகு, தமிழரிடையே சென்னை பற்றிய கிளர்ச்சி அடங்கி விட்டது; ஏன்? தமிழ் மக்கள் உறங்கி விட்டனர் என்று கூடக் கூறலாம். சென்னை பறிபோகாதென்ற உறுதியே இவ்வுறக்கத்திற்குக் காரணம் போலும்! ஆனால், ஆந்திரர்கள் உறங்கி விடவில்லை; ஓய்ந்துவிடவுமில்லை. எப்படியும் சென்னையைப் பறிக்காமல் விடுவதில்லை என்ற செருக்குடன் பாடுபட்டு வருகின்றனர். ஆந்திரர்கள் சென்னையைப் பறிக்க வேண்டுமானால், அந்நகரில் தங்கள் ஆதிக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டுமல்லவா? இந்த ஆதிக்கத்தைப் பெருக்க ஒவ்வொரு அங்குலத்திலும், அமைதியுடன்-ஆனால் அசைக்க முடியாத உறுதியுடன் பாடுபடுகின்றனர்; பலனும் காண்கின்றனர்.

வயது வந்த வாக்காளர் பட்டியல் ஆந்திர ஜில்லாக்களில் தெலுங்கிலும், தமிழ் ஜில்லாக்களில் தமிழிலும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், சென்னை நகரத்தில் மட்டும் தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளிலும் வாக்காளர் பட்டியல் அச்சிடப்பட்டிருக்கிறது. இச்செயல் ஏதோ அகஸ்மாத்தாக நடந்துவிடவில்லை. ஆந்திரத் தலைவர்களின் தூண்டுதலாலேயே நடைபெற்றிருக்கிறது. சென்னை நகரம் "பொது நகரம்" (காமன் சிட்டி) என்.

பதை வற்புறுத்தவே வாக்காளர் பட்டியல் தெலுங்கிலும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் சார்பாக நடந்திருக்கும் இந்த அநீதிக்கு தமிழ் அமைச்சர்களும் ஆதரவு தந்திருக்கின்றனர். இவர்களது போக்கைக் கண்டு அழுவதா? சிரிப்பதா?

சென்னை நகரிலுள்ள தெருப் பெயர்களின் விளம்பரப் பலகைகள் இத்தனை நாளும் ஆங்கிலத்திலும் தமிழிலுமே இருந்து வந்தன. அவற்றைத் தெலுங்கிலும் அறிவிக்க வேண்டுமென ஆந்திரத் தலைவர்கள் சமீபகாலமாக கிளர்ச்சி செய்து வந்தனர். அந்த் கிளர்ச்சியில் வெற்றியும் பெற்றிருக்கின்றனர். டிவிஷனின் எண், தெருவின் எண் இரண்டுயடங்கிய புதுப்போர்டுகள் வீதிகளின் சுவற்றில் பொருத்தப் பட்டிருக்கின்றன. தமிழிலிருக்கும் வீதிப் பெயர்களை விலக்குவதற்கு இது ஆரம்ப வேலை.

மொழித் துறையில் மட்டுமல்ல; சென்னை நகர் சம்பந்தப்பட்ட அதிகாரப் பதவிகளைக் கைப்பற்றுவதிலும் ஆந்திரர்கள் திட்டமிட்டு முன்னேறுகின்றனர். சென்னை கார்ப்பொரேஷன் கமிஷனர் பதவியில் இப்போதிருந்து வரும் திரு. சி. நரசிம்மநாயுடு ஒரு ஆந்திரர். அவர் கமிஷனர் பதவியில் அமர்ந்த பிறகு சென்னை கார்ப்பொரேஷனிலுள்ள சிப்பந்திகள்முதல், உயர்தர அதிகாரிகள் வரை பெரும் பாகம் ஆந்திரர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

தெலுங்குப் பிள்ளைகள் ஐந்து பேர்கள்கூட முன் வராத டிவிஷன்களிலெல்லாம், தெலுங்குப் பள்ளிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. கமிஷனரின் தெலுங்குப் பற்று காரணமாக கார்ப்பொரேஷன் பணம் வீணில் செலவழிகிறது. இந்த நிலையில் திரு. நரசிம்மலு நாயுடுவின் பதவிக் காலம் முடிந்திருந்தும் அவரே பேலும் மூன்று ஆண்டுகளுக்கு பதவியிலிருந்துவர அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த நீதியற்ற நியமனத்தை எதிர்த்து கார்ப்பொரேஷனில் 15 பேருக்கு மேற்பட்ட கவுன்சிலர்கள் கொண்டு வந்த அவசரத் தீர்மானத்தை மேயர் நிராகரித்து விட்டார்.

மற்றும் கார்ப்பொரேஷன் வரி அப்பீல் கமிட்டியின் தலைவராயிருந்த திரு. நாராயண மேனன் காலமானதால் அவரது பதவிக்கு வேறு ஒருவரை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்தப் பதவிக்குத் தகுந்த அறிவும் ஆற்றலுமுடைய தமிழர் பலர் அரசாங்கத்துக்கு மனுச்செய்துகொண்டனர். ஆனால், அரசாங்கத்தார் தமிழர்களின் மனுக்களைத் தள்ளுபடி செய்து திரு. ராகவ ரெட்டி என்ற ஆந்திரரை அந்தப் பதவிக்கு நியமித்துள்ளனர். திரு. ரெட்டியார் இப்போது கார்ப்பொரேஷன் கவுன்சிலின் காரியதரிசிப் பதவியில் இருந்து வருகிறார். அவர் புதிய பதவிக்குப் போவதால், காலியாகும் காரியதரிசி பதவிக்கும் ஒரு ஆந்திரரே நியமிக்கப்படுவாரானால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மற்றும், சென்னை அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டுள்ள

கருத்தோவியம்

குற்றத்தை மன்னிப்பது நல்லது. ஆனால், அதனை மறந்து விடுவது அதனினும் நல்லது.

ஃ

உழைப்பிலே இன்பங்காண்; இல்லாவிட்டால் இன்பத்தின் ருசியே உனக்குத் தெரியாது.

ஃ

பிறர் தொண்டு என்னும் நிலத்திலே எவ்வளவுக் கெவ்வளவு அன்பு நீர் பாய்ச்சப் பெறுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு நமது அன்புப் பயிர் செழித்தோங்கி வளர்கிறது.

ஃ

நல்ல நூல்களை முதலில் படியுங்கள். நீங்கள் எத்தனை நூல்களைப் படித்திருக்கிறீர்கள் என்பது முக்கியமல்ல; எந்த மாதிரியான நூல்களைப் படித்திருக்கிறீர்கள் என்பதுதான் முக்கியமானது. —ஒரு அறிஞர்.

ஃ

பெரிய காரியங்களைச் சாதிப்பதற்குத் தன்னம்பிக்கை வேண்டும். —ஜான்சன்.

ஃ

நாம் தினந்தோறும் ஒருவனைப் பார்த்துப் பழகிக்கொண்டிருந்தால் அவனுடைய பெருமை நமக்குத் தெரிவதில்லை. மற்றச் சாதாரண மனிதர்களின் நிலையிலேதான் அவனையும் வைத்துப் பார்க்கிறோம். அவனுடைய பெருமைகள் புதுமையிழந்து நிற்கின்றன. —வாஷிங்டன் இர்விங்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

நகர அபிவிருத்திக் கமிட்டி (சிட்டி இம்ருவ்மெண்ட் டிரஸ்டு)க்கும் ஒரு ஆந்திரரே தலைவராக்கப் பட்டிருக்கிறார். ஸ்தல ஸ்தாபன அமைச்சர் திரு. சந்திரமவுலியும், நிதி அமைச்சர் கோபால ரெட்டியும் ஆந்திரர்களாயிருப்பதால் சென்னை கார்ப்பொரேஷன், சென்னை நகர அபிவிருத்தி ஆகியவை சம்பந்தப்பட்ட உத்தியோகங்களெல்லாம் ஆந்திரர்களின் ஏகபோக உரிமையாகி வருகின்றன. இந்த லட்சணத்தில்தான் சென்னை அரசாங்கத்தைத் தமிழர் கைப்பற்றி விட்டதாக பிரகாசம் கூட்டத்தார் கூச்சல் போடுகின்றனர்.

மூடர் சொல்லும் 'விதி'!

சில மூடர், எடுத்ததெற்கெல்லாம் 'விதிவசம்' என்கின்றார்கள், ஆமடா, விதிவசந்தான்! அறிவில்லாதவர்களுக்கு இன்பமில்லை என்பது ஈசனுடைய விதி. சாத்திரமில்லாத நாட்டிலே நோய்கள் விளைவது விதி. தமிழ் நாட்டிலே சாத்திரங்கள் இல்லை. உண்மையான சாத்திரங்களை வளர்க்காமல், இருப்பனவற்றையும் மறந்து விட்டுத் தமிழ் நாட்டுப் பார்ப்பார் பொய்க் கதைகளை மூடரிடம் காட்டி வயிறு பிழைத்து வருகிறார்கள்.

—பாரதியார்.

எதிர்காலத்தில் எப்படி?

நமது செய்கையின் விளைவுகளுக்கு மாத்திரமேயன்றி, நம்மைச் சேர்ந்தவர்களின் செயல்களாலுண்டாகும் விளைவுகளுக்கும் நாம் ஆளாகிறோம்.

—பாரதியார்.

தமிழை மறந்து தமிழ்நாட்டில் வாழலாம்?

—டாக்டர் மு. வரதராஜனார்

●

ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு பேச்சு நாடெங்கும் நிலவும். இந்தச் சில வாரங்களாகத் தமிழ் நாட்டில் பேசப்படும் பெரும் பேச்சு புதிய கல்வித் திட்டத்தில் தமிழுக்கு உள்ள இடத்தைப் பற்றியே ஆகும்.

நல்ல வேளையாக இந்தப் புதிய திட்டம் இப்போது அமுலுக்கு வராதபடி இன்னும் ஓர் ஆண்டு ஒத்திவைக்கப் பட்டுள்ளது. ஆனால் அதைக் கண்டு மகிழ்ச்சி அடையவோ, அமைதி அடையவோ இடம் இல்லை. மகிழ்ச்சியோ அமைதியோ இப்போது அடைந்து வாளா இருப்பது தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் துரோகமான போக்கே ஆகும். காரணம் வேறொன்றும் இல்லை; ஒத்திவைக்கப்பட்டது இன்னும் ஓராண்டு கழித்து அமுலுக்கு வருமானால், வழக்கம் போல் தமிழர்களின் எதிர்ப்புணர்ச்சி ஆறிப் போய்விடும்; திட்டத்தை ஆர அமர நடத்திவைப்பதற்கு இடம் ஏற்பட்டு விடும். ஆகவே, இன்று தள்ளிவைக்கப் பட்டுள்ள அந்தத் திட்டம் மறுபடியும் தலையெடுக்காதபடி செய்வதே தமிழர்களின் கடமையாகும். அரசாங்கத்தார் அந்தத் திட்டத்தை அடியோடு கைவிடும் வரையில் - அடுத்த ஆண்டில் அவ்வாறு வெளிப்படையாக அறிக்கை வாயிலாகத் தெரியப்படுத்தும் வரையில், தமிழர்களின் வாயும் மனமும் அமைதியடையக் கூடாது. மாநாடுகளும் மேடைகளும் இல்லாவிட்டாலும் கவலை இல்லை. திண்ணைப் பேச்செல்லாம் இதுவாக இருக்க வேண்டும்; வயிற்றெரிச்சல் எல்லாம் இதுவாக இருக்க வேண்டும்.

தமிழர்கள் அறிவில் சிறந்தவர்கள்; கலையுணர்வில் சிறந்தவர்கள்; ஆற்றலும் மிகுந்தவர்கள். ஆயினும், அரசியலிலும் வியாபாரம் முதலிய துறைகளிலும் தமிழ் நாட்டில் இன்று சீர்குலைந்த நிலையில் இருக்கின்றார்கள். இன்று மட்டும் அல்ல, சில நூற்றாண்டுகளாகவே இந்த நிலைமை காணப் படுகின்றது. இதற்குக் காரணம்: ஒன்று, தமிழர்களின் தாராள மனப்பான்மை (தம்மையும் மறந்து தம் மாற்றார்க்கு உதவி செய்யும் மனப்பான்மை); மற்றொன்று, கொதிநீர் போல் உணர்ச்சி ஆறிப் போகும் தன்மை. மொழிப் போராட்டத்தில் இன்று எதிர்ப்புத் தொடங்கி விட்டதால், தாராள மனப்பான்மைக்கு இடம் இல்லை; ஆகையால் பாதி வெற்றி என்றே சொல்லலாம். அடுத்த ஆண்டு வரையில் இந்த உணர்ச்சி ஆறிப் போகாதிருந்தால் மற்றொரு பாதியும் வெற்றி தான். "இந்தி எதிர்ப்பு முதலில் ஆரவாரமாக நடந்து, இப்போது கேட்பாரற்றுப்

போனதுபோல், இந்தத் தமிழ்ப் பாதுகாப்பு முயற்சியும் விரைவில் ஆறி அடங்கிப் போய் விடும்'' என்று மற்றவர்கள் நம்புவதற்கு இடம் தரக் கூடாது.

உணர்ச்சி குறைவாக இருந்தாலும் குற்றம் இல்லை; கேடு இல்லை. ஆனால், எழுந்த உணர்ச்சி விரைவில் ஆறிப் போகுமானால், அதுதான் ஒரு நாட்டின்பிற்போக்குக்குக் காரணம் என்பதை வரலாறுகள் தெரிவிக்கின்றன. உணர்ச்சி குறைந்த நாடுகள், இருக்கும் உணர்ச்சியை மாறாமல் காத்துக் கருமத்தில் கண்ணாக இருந்து வெற்றி பெறுகின்றன. ஆனால், உணர்ச்சி மிகுந்த நாடுகள் கடமையை மறந்து பகைவர்களின் சூழ்ச்சி வலையில் விழுந்து கெடுகின்றன. தமிழ் நாடு பல முறை அவ்வாறு விழுந்து விழுந்து கெட்டுத் தலையெடுக்கப் பார்க்கும் நாடு. ஆகையால், மொழி வளர்ச்சிக்கு நெருக்கடியான இந்த நிலையில் மிக விழிப்பாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தமிழனுடைய வாயும் இதைப் பேசுமாறு, ஒவ்வொரு தமிழனுடைய மனமும் இதை எண்ணுமாறு, திண்ணைப் பேச்சு வலுக்க வேண்டும். பெரிய மேடைகளின் முழக்கம் இரண்டொரு வாரத்து உணர்ச்சிக்குப் பயன்படும்; பொதுத் தேர்தலுக்குப் பயன்படும்; பெரும் புரட்சிக்குப் பயன்படும்; அவ்வளவே. ஆனால், திண்ணைப் பேச்சுத்தான் நிலையான மனமாறுதலை ஏற்படுத்தும்; ஓட்டுப் போடுகிறவர்களின் கையைத் திருத்தப் பயன்படும்; நாட்டை ஆள்வோரின் பேனாவைத் திருத்தவும் பயன்படும்.

குறைந்த உணர்ச்சியாக இருந்தாலும், நெடுங்காலம் நின்று பயனுள்ள தொண்டு ஆற்ற வேண்டுமானால், அந்த உணர்ச்சி அறிவின் அடிப்படையில் நிற்கவேண்டும்; வெறி என்னும் சூறாவளியை நம்பக் கூடாது. மற்ற மொழிகளின் மேல் உள்ள வெறுப்பால் பகையுணர்ச்சியாக உருவாகக் கூடாது; தம் மொழியின்மேல் உள்ள அன்பால் கடமையுணர்ச்சியாக அமைய வேண்டும். மேடைப் பேச்சில் இவற்றிற்கு இடம் இல்லை. ஆகையால், வீடுதோறும் தமிழ்த் தாயை மறக்காத திண்ணைப் பேச்சுத்தான் இதை நல்ல இயக்கமாக்கும். இமயமலையே வந்து புரண்டாலும், சதையைத் துண்டு துண்டாக்கும் தண்டனையே பிறந்தாலும், தமிழரின் எண்ணம் சாயாத வல்லமை அப்போதுதான் வரும். கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பேசுவதைவிட, கடமையை நாட்டத்தில் கொண்டு உறுதி பூண்டால்தான், இமயத்தின் வாடையையும் எதிர்க்கும் பேராற்றல் தமிழ்த் தென்றலுக்கு ஏற்படும்.

புதிய திட்டத்தில் உள்ள குறை என்ன? தமிழ் நாட்டில் தமிழை மறந்தவர்களும் புறக்கணித்தவர்களும் செல்வாக்குப் பெற அதில் இடம் உண்டு. தமிழைப் போற்றுகின்ற குடும்பத்துப் பிள்ளைகள் தலையெடுக்க வழி இல்லை. இதை உள்ளவாறு

உணர்ந்து திண்ணை தோறும மனவேதனையும் வயிற்றெரிச்ச லும் வளர்ந்தால் போதும்; தமி ழும் தமிழ் நாடும் விரைவில் தலை தூக்குவது திண்ணம்.

ஒரு குஜராத்திப் பையன் தமிழ் எழுத்தையும் தெரிந்து கொள்ளாமல் தமிழ் நாட்டில் கல்வி கற்றுப் பட்டம் பெற இடம் உண்டு. ஒரு தமிழ்ப் பையனும் தமிழை விட்டுவிட்டு, வடமொழியும் இந்தியும் ஆங்கி லமும் படித்து வல்லவனாக விளங்க இடம் உண்டு. சில ஆண்டுகளுக்கு முன்பு, கான் வெண்டு பள்ளிக்கூடங்களில் படித்து ஆங்கிலமும் பிரெஞ்சு மொழியுமே படித்து, மற்றப் பாடங்களையும் ஆங்கிலத்தி லேயே படித்துப் பல்கலைக் கழ கப் பட்டமும் பெறுவது, தமிழ் நாட்டில் பெருவாழ்வு பெறு வதற்குக் குறுக்கு வழியாக விளங்கியது. இந்த நிலைமையை மாற்றியமைத்த வீரர் திரு. அவிநாசிலிங்கம் செட்டியார். அதுதான் இந்தப் புதிய முறை யால் தகர்க்கப் படுகின்றது. வடமொழியும் இந்தியும் மட் டுமே கற்று, மற்றப் பாடங்களை யும் (குஜராத்திப் பிள்ளைகளோ டும் மற்றவர்களோடும் சேர்ந்து) இந்தியிலேயே படித்து, பல்கலைக் கழகப் படிப் பும் அதிலேயே படித்து முடித்து, சீர்பெறுவதற்கு இந் தப் புதிய திட்டம் வழி கோலு கின்றது. தமிழை மறந்து கான் வெண்டு பள்ளிக்கூடங்களில் படித்து உயர்ந்தவர்களே முன் பெல்லாம், ஆங்கிலத்தில் வல்ல வர்களாகவும் பிறநாடுகளுக்குச் சென்று செல்வாக்குப் பெறக் கூடியவர்களாகவும் விளங்கி னார்கள். இனிமேல், தமிழை மறந்து ஆங்கிலம், இந்தி, வட மொழி முதலியவைகளை மட்டும் கற்பதற்குக் (கான்வெண்டு பள்ளிக்கூடங்களை மட்டும் அல் லாமல்) எல்லாப் பள்ளிக்கூடங் களையுமே மாற்றுவதற்கு வழி கோலுவது புதிய திட்டம். முன்பு மொழித் துறையில் ஆங் கில ஏகாதிபத்தியம். புதிய திட் டம் அமைப்பது இந்தி ஏகாதி பத்தியம். ஆனால், முன்பு தமி ழையும் வளர்ப்பதற்கு இடம் இருந்தது. இப்போது புது முறை தமிழைப் புறக்கணிப்ப தற்குத் தூண்டுகோலாக இருக் கின்றது.

தமிழ்ச் சிறுவன் உயர்நிலைப் பள்ளியில் பிறமொழி படிக்க லாம்; அதில் தவறு ஒன்றும் இல்லை. தாய் மொழியோடு மற் றொரு மொழியும் படிப்பது அறிவு வளர்ச்சிக்கு நன்மை யானதே. ஆனால், பிறமொழி படிப்பதற்காகத் தாய் மொழியை மறந்து துரோகம் செய்யும் நிலைமை இருக்கக் கூடாது. ஆகையால், திட்டம் வகுப்பவர்கள் இதற்கு இடம் இல்லாதவாறு செய்ய வேண் டும். அந்த நோக்கம் புதுத் திட் டம் வகுத்தவர்களுக்கு இல்லை. தமிழை எளிதில் ஒதுக்கித் தள் ளவே இதில் இடம் தரப்பட் டிருக்கின்றது. இந்தப் புதிய திட்டம் அமுலுக்கு வருமானால், இனிமேல் ஆங்கில மோகத் திற்கு ஈடாக, அதைவிட மிகுதி யாக இந்தி மோகம் வளர்ந்து விடும். தமிழ்ப் பிள்ளைகள் பெற் றோர்க்குக் கடிதம் எழுதும் போதும் இந்தியில் எழுத முற்

படுவார்கள்; நண்பர்களோடு பேசும் போதும் இந்தியிலே பேச முற்படுவார்கள். ஆங்கிலத்தில் கடிதம் எழுதுவதும் அளவளாவிப் பேசுவதும் நாகரிகம் என்று இருந்த அந்நிய மோகம் இப்போதுதான் நீங்கி வருகின்றது. இனிமேல் இந்தியில் எழுதுவதும் பேசுவதுமே நாகரிகம் மட்டும் அல்லாமல் நல்ல கடமை என்றும் தமிழ்ப் பிள்ளைகள் மயங்கி மோகம் கொள்ள வழி கோலப்படுகின்றது.

"எனக்கு டமிள் பேசவராது" என்று கூட்டங்களில் தமிழ்த் தலைவர்கள் சொல்லிக் கொண்டு ஆங்கிலத்தில் ஃபேசி ஒருவருக்கும் விளங்காதபடி நடித்து மாலை சூட்டிக் கொண்டு வீட்டுக்குச் சென்ற காலத்தைப் பழித்தோம்; அந்தக் காலமும் மறைந்தது. அதே மூடத்தன்மை இனி இந்தியின் பெயரால் வளர்வதற்கு வழி இல்லாமல் காத்துக் கொள்ள வேண்டியது தமிழரின் பெருங்கடமையாகும்.

முதல் மொழியாக வடமொழியைப் படித்து விட்டு, இரண்டாம் மொழியாகவும் மூன்றும் மொழியாகவும் இந்தியையும் ஆங்கிலத்தையும் படித்து வெளிவரும் தமிழ்ப் பிள்ளைகள் தமிழ் நாட்டுக்கு என்ன தொண்டு செய்ய முடியும்? அவர்கள் திரும்பத் திரும்பச் சில கேடுதரும் கருத்துக்களைப் பரப்ப முடியும். அவை :-

1. வட மொழியில் எல்லாம் உண்டு, தமிழில் ஒன்றும் இல்லை.

2. வட மொழியே சிறந்த மொழி; தமிழ் நேற்றைய காட்டுமிராண்டிக் குழந்தை.

3. இந்திக்கு ஒரு தனி அழகும் ஆண்மையும் ஆற்றலும் உண்டு; தமிழுக்கு ஒன்றும் இல்லை. அது வீடுகளில் குழந்தைகள் பேசும் மொழியாக இருக்கலாம். வீடுகளிலும் குழந்தைகளோடு இந்தியிலேயே பேசிப் பழகிவிட்டால், பள்ளிக்கூடத்தில் அந்தக் குழந்தைகள் இந்தியில் திறமை பெற்று நல்ல சிறப்பு அடைய முடியும்.

4. கிராமங்களில் போய்த் தமிழில் பேச எங்களுக்கு வராது. கிராம மக்களைத் திருத்துவதற்கு எங்களால் முடியாது. அவர்களுக்குத் தமிழ் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை.

5. திருவள்ளுவர், இளங்கோ, கம்பர், ஔவையார் காலத்துத் தமிழ் எல்லாம் வாயில் நுழைவது கடினம்; அந்தத் தமிழ் இப்போது வேண்டியதும் இல்லை. அவை எல்லாம் செத்துப் போன தமிழ்.

6. முதல் மொழியாக வடமொழி படித்தால்தான் இந்தியும் ஆங்கிலமும் படித்துப் பட்டம் பெறுவதற்கு முடியும். முதல் மொழியாகத் தமிழ் எடுத்துப் படித்தால், அந்தத் தமிழ் நாக்கு இந்தியை நன்றாகக் கற்றுக் கொள்ள முடியாமல் தடுக்கும்; ஆங்கிலமும் நன்றாக வராது. வட மொழி படிக்கும் பிள்ளைகள் இந்தியும் ஆங்கில

(33-ம் பக்கம் பார்க்க)

ஆட்கொண்டவள்

(கா. மு. ஷெரீப்)

●

முல்லைப் புதரருகே வானில்
மொய்த்திடும் தாரகை போன்ற மலரினை
கிள்ளிநின்ருெருபெண் இன்னும்
கீதம் இசைத்தனள் கானக் குயில் போலே!

சொல்லின் சுவையமுதம், என்னை
தூண்டிலாய்ப் பற்றிட சென்றேன் அருகிலே
வள்ளுவன் வாய்மை யுரை தன்னை
வாரிவழங்கினுள் வையம் செழித்திட

தென்றல் சிலுசிலுப்போ? நல்ல
தேன்மலர் வாசமோ? எங்கள் தமிழென்ருள்
பொன்ருப் புலவரிலே நாங்கள்
போற்றிடும் பாரதி போலெவர் உண்டென்ருள்

சங்கப் புலவர்களும் கம்பன்
சாற்றிய வேதமும் பாக்களில் கொஞ்சிட
எங்கள் இளங்கோ தந்த சிலம்பின்
இன்னிசை ஆர்த்தனள் பாகுமொழி தன்னில்

"அம்மை நீ வாழ்க!" என்றேன் மனம்
ஆனந்தங் கொள்ள "என் ஆய தமிழ் தரும்
செம்மை யுரைத்தவளே! நீ யார்?
செப்பிடு!" என்றேன் மின்வெட்டில்
மறைந்தனள்

ஆயகலை மகளும் சிவனும்
ஆய்ந்தும் முடிந்திடா மூவா மருந் தென்னும்
தூயதமிழ் மொழியோ? பெண்
தோற்றத்தே வந்தென்னை ஆட்கொண்ட(து)
அன்றென்னை

சுவிட்சர்லந்தில் அரசியல் முறை

○ சோம. லெ. இலக்குமணச் செட்டியார் ○

நம் நாட்டை சுவிட்சர்லந்து நாட்டோடு ஒப்பிடுவது சரியன்று என்று கூறுவோர் பலர் உண்டு. இச்சாரார், சுவிஸ் நாட்டின் உருவை மட்டுமே கருத்திற் கொள்ளுகின்றனர். இன்று உலகில் நிலைத்துள்ள குடியரசுகளுள் முதன் முதல் தோன்றியது சுவிஸ் குடியரசே. 700 ஆண்டுகளாக அரசியல் தகராறு இன்றி அந்த நாட்டின் அரசுமுறை சிறப்பாக நடந்து வந்திருக்கிறது; படை இன்றியே அந்த நாடு தன் எல்லைகளைக் காத்துக் கொண்டிருக்கிறது; பெரும் போர்களில் சிக்கிக் கொள்ளாமல், சுவிஸ் நாடு நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றி வந்திருக்கிறது. பல இனத்தவர் அங்கே வாழ்ந்து வருகிற போதிலும், அவர்கள் சச்சரவின்றியும் ஐக்கிய மனநிலையோடும் இருந்து வருகின்றனர். பொருளாதாரத் துறையில் அந்த நாடு வியத்தகு முன்னேற்றம் அடைந்திருக்கிறது. அதனுடைய நாணயம் தங்கத்துடன் இணைக்கப்பட்டு மிக்க வலுவுள்ளதாக இருக்கிறது. இத்தகைய சிறப்புக்களை இந்தியக் குடியரசும் அடைய வேண்டுமானால், சுவிஸ் நாட்டு அரசியலின் சில சிறந்த பகுதிகளை நாம் நமது அரசியல் சட்டத்திலும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தலைநகர்

சுவிஸ் நாட்டின் தலைநகரான பேர்ன், அந்த நாட்டின் நடு இடத்தில் இருக்கிறது. எல்லா முக்கிய நகரங்களும் பேர்னிலிருந்து சம தூரத்தில் இருப்பது அந்த நாட்டின் படத்தைப் பார்த்தவுடன் தெளிவாகும். நாட்டின் பல்வேறு பகுதியினரையும் திருப்தி செய்வதற்காகப் பல ஏற்பாடுகள் அங்கே உண்டு. இதன்படி, சுவிஸ் நாட்டின் வெளியுலக விவகாரங்களைக் கவனிக்கும் அமைச்சர் குழு ஜினிவா நகரத்திலும், உயர்ந்த நீதிமன்றங்கள் லாசேன் நகரிலும், பங்கு மார்க்கட் - சுவிஸ் அரசியலாரின் பேங்கு - இவற்றின் தலைமை அலுவலகங்கள் சூரிக் நகரிலும், ஏற்றுமதி இறக்குமதி வாணியம் பேசில் நகரிலும் இருக்கின்றன. நம் நாட்டில் தமிழ் மக்கள் தங்களுடைய எல்லா அலுவல்களையும் டில்லியிலும், பம்பாயிலும் கவனிக்க வேண்டிய ஒருதலைச் சார்பான நிலை ஏற்பட்டிருப்பது மிக்க வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. நாட்டு மக்களிடையே ஐக்கிய மனப்பான்மை பரவ வேண்டுமானால், ஒரு சாரார் மட்டுமன்றி, மற்றவர்களும் பல காரியங்களில் விட்டுக் கொடுக்க வேண்டும்; பரஸ்பரம் ஓரினத்தவர் மற்ற இனத்தவருடன் பழகும் வாய்ப்பும் ஏற்பட வேண்டும். எனவே, இந்திய சுப்ரீம் கோர்ட்டைப் பெங்களூரிலாவது சென்னையிலாவது அமைத்திருக்க வேண்டியது மிக மிக நியாயமானது. ஓர் அரசின் பல பகுதிகளையும் திருப்திசெய்ய வேண்டுமென்ற

கொள்கை பல இடங்களில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. சான்ருக, ஜவாஹர்லால் நேருவின் உத்தர பிரதேஷ் ராஜ்யத்தில் தலைநகர் லக்னேவிலும், நீதிமன்றம் அலஹாபாதிலும் இருந்து வருகிறது; சர்தார் வல்லபபாய் பட்டேல் இணைத்த திருவாங்கூர் - கொச்சி ராஜ்யத்தில், தலைநகர் திருவனந்தபுரத்திலும், நீதிமன்றம் கொச்சியிலும் இருந்து வருகிறது. இதனுல் அரசாங்க அலுவல்களுக்காகக் கொச்சி மக்கள் திருவனந்தபுரத்துக்குச் செல்லுகின்றனர்; திருவாங்கூர் மக்கள் நீதிமன்ற அலுவல்களுக்காகக் கொச்சிக்கு வருகின்றனர். இதைப்போலவே, தென்னுட்டார் டில்லிக்கு அரசியல் வேலைகளுக்குச் செல்லுவதுபோல, வடநாட்டார் சென்னைக்கோ பெங்களூருக்கோ நீதிமன்ற வேலைகளுக்குச் செல்லும் தேவை சட்டமூலமாய் ஏற்பட்டால் ஒழிய, அகில இந்திய ஒற்றுமை என்பது பகற் கனவாகவே இருக்கும்.

மொழிப் பிரச்னை

அகில இந்திய ஒற்றுமையை வளர்க்க மற்ருெரு கருவி, மொழிப் பிரச்னை. பொது மொழி ஒன்று இன்றியமையாததுதான். இன்றியமையாதது என்ருல், ஓர் இனத்தவர் தம் மொழியை மற்ற இனத்தவர் மீது புகுத்துவது என்று பொருளன்று; ஆங்கில மொழி ஏகாதிபத்தியத்துக்குப் பதிலாக, ஓர் இந்திய மொழி ஏகாதிபத்தியம் ஏற்பட வேண்டுமென்று பொருளன்று. எல்லா இந்தியர்களும் இந்தி மொழி கற்ருல், இந்தி மொழி பேசுவோர் தம் மொழியும் ஆங்கில மொழியும் ஆக இரண்டு மொழிகள் மட்டும் கற்ற இந்தி வாலாக்களுடன், மூன்று மொழி கற்று மற்ற இனத்தவர் போட்டி போட வேண்டியதிருக்கும்.

எல்லா இந்தியர்களுடனும் இந்தி மொழியில் பேசும் வாய்ப்பு ஏற்படுவதால், பிரிட்டிஷாரைப் போலவே, ஹிந்தி வாலாக்களும் மற்ற இந்திய மொழிகளைக் கற்க மாட்டார்கள். அதன் விளைவாக, பிரிட்டிஷாரைப் போலவே இந்தி ஏகாதிபத்தியத்தினரும் பாமர மக்களிடமிருந்து பிரிந்தே இருப்பார்கள். இந்தி கற்றவர்களும் ஆங்கிலம் கற்றவர்களைப் போலவே, மற்ற மக்களைவிடத் தாங்கள் சிறந்தவர்கள் என்ற செருக்கு மனப்பான்மையில் இருந்து வருவர். இன்றைய அரசியல் வாழ்வு ஆங்கிலம் கற்ருேரின் தனிச் சொத்தாக இருப்பது போல, வருங்கால அரசியல் வாழ்வு இந்தி கற்ருேரின் ஏக போக உரிமையாக இருக்கும். ஆங்கிலம் அறிந்தவர், ஆங்கிலம் அறியாதவர் என்ற வேறுபாடு இருப்பதுபோல, இந்தி அறிந்தவர், இந்தி அறியாதவர் என்ற வேறுபாடும் ஏற்படும். இன்று ஆங்கிலம் கற்றவர்கள் எடுத்ததற்கெல்லாம் ஆங்கில மேற்கோள் காட்டுவதும், ஆங்கிலத்தில் எழுதுவதும் பேசுவதும் சிந்திப்பதும் ஆங்கிலப் படங்களையே பார்ப்பதும் போலவே, இந்திக் கூட்டத்தாரும் இந்தியில் செய்யத் தொடங்குவர். இதனுல், அகில இந்திய

அரசியல் மொழியாக இந்தி வளர்ச்சி பெற்று விடும். ஆனால் தமிழ்நாட்டின் அரசியல்மொழியாகத் தமிழ் ஏற்படும் காலம் வரையறை செய்யப்படவில்லை. ஒரு புறம் ஹிந்தி மொழி பேசும் ராஜ்யங்கள் தங்கள் அலுவல்களை இந்தியில் நடத்தத் தொடங்கிவிட்டன ; மற்றொரு புறம் மொழிவாரி ராஜ்யங்கள் ஏற்படுவதற்கு முட்டுக்கட்டை போடப்படுகிறது. தமிழ் மக்களிலேயே இந்தி கற்றவர்கள் தங்களுக்குப் பதவிகள் கிடைப்பதற்காக இந்தியையே சென்னை ராஜ்யத்தின் அரசியல் மொழியாக்க வேண்டுமென்றும் இன்னும் 10 ஆண்டுகளில் கிளர்ச்சி செய்ய முன்வந்து விடுவர்.

இந்தத் தீமைகளை எல்லாம் தடுக்க வேண்டுமானால், இந்தியைத் தாய் மொழியாக உடையவர்களும் தமக்கு விருப்பமான ஒரு இந்திய மொழியை - தமிழ், தெலுங்கு, வங்காளி அல்லது வேறொன்றைக் கட்டாயமாகக் கற்க வேண்டுமென்ற சட்டம் ஏற்பட வேண்டும். அப்போது தான் அகில இந்திய ஒற்றுமை ஏற்பட இயலும். இந்தி மக்கள் மீது மற்ற இனத்தவர்களுக்கு இருக்கிற வெறுப்பு நீங்காவிட்டாலும், குறைய வேணும் வழி பிறக்கும். இந்தி மக்களுக்கும், மற்ற இனத்தவரின் கலை, பண்பாடு, மொழி ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படும். இந்தச் சிக்கலான மொழிப் பிரச்னை, வேறு பலநாடுகளிலும் இருந்து வருகிறது. உதாரணமாக, பெல்ஜியம் நாட்டில் வாலூன்ஸ், பிளெமிங்ஸ் என்ற இரு இனத்தவர் இருக்கின்றனர். வாலூன்ஸ் என்போர், பிரெஞ்சு மொழி பேசுவோர். பிளெமிங்ஸ் என்போர், பிளெமிஷ் மொழி பேசுவோர். பெல்ஜிய ஐக்கியம் என்ற காரணங் காட்டி, பிளெமிஷ் மொழி வாலூன்ஸ் மக்கள் மீது திணிக்கப்பட்டது. பிரெஞ்சு, தமிழ் மொழி போலச் சிறந்த மொழி; வளர்ச்சியடைந்த மொழி; இலக்கிய, இலக்கண வளங்கள் நிறைந்தது. இவ்வளவு சிறந்த மொழிக்குரிய மக்கள், இந்தியைப் போல வளர்ச்சியடையாத பிளெமிஷ் மொழியை எவ்வாறு கற்பார்கள்? இன்று பெல்ஜியத்தில் அரசர் பற்றிய தகராறு நடப்பதற்கும், அமைச்சர் குழு அடிக்கடி மாறுவதற்கும் அந்த நாட்டின் மொழிப் பிரச்னையே காரணமாகும். இந்தி வாலாக்கள் இதை ஊன்றிக் கவனிப்பார்களாக.

பல மொழிகளுள்ள நாட்டுக்குச் சுவிட்சர்லந்து ஒரு சிறந்த உதாரணம். அங்கே, நான்கு மொழிகள் உண்டு. ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன், ரொமான்ஷ் ஆகிய நான்கு மொழிகளுமே அங்கே அரசியலாரின் மொழிகளாக உள்ளன. இவ்வளவுக்கும், அங்கே 72 சதவிகித மக்கள் ஜெர்மன் மொழி பேசுகின்றனர்; 17 சதவிகித மக்கள் பிரெஞ்சு மொழி பேசுகின்றனர். பெரும்பாலான மக்கள் ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன் ஆகிய மூன்று மொழிகளும் அறிந்தவர்களாக இருக்

கிறார்கள். இந்தி வாலாக்களைப் போல சுவிட்சர்லந்திலுள்ள ஜெர்மன்காரர்கள், "எங்கள் மொழியை மிகப் பலர் பேசுகின்றனர்; ஆகையால், மற்றவர்கள் எங்கள் மொழியைக் கற்க வேண்டும்; நாங்கள் மற்றவர்களுடைய மொழிகளைக் கற்க மாட்டோம்" என்று கூறவில்லை. இந்தச் சிறந்த அமைப்பின் பலனாக, சுவிஸ் பார்லிமெண்டில் ஒவ்வொரு மொழியினரும் தத்தம் மொழியில் பேசுகின்றனர். பிரெஞ்சு மொழி பேசும் ஒரு வழக்கறிஞர், நீதி மன்றப் பிரச்னைகளைப் பற்றிப் பிரெஞ்சு மொழியிலேயே கடிதம் எழுதுகிறார். அதற்குப் பதிலை, ஜெர்மன் மொழியிலேயே ஜெர்மன் வழக்கறிஞர் பிரெஞ்சு வழக்கறிஞருக்கு எழுதுகிறார். இருவரும் அதைப் புரிந்து கொள்ளுகின்றனர். இவ்வாறு பெரும்பான்மையான மக்களாகிய சுவிஸ் ஜெர்மானியர், மொழிப் பிரச்னையில் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொண்டனர்; எண் பற்றிய தகராறும் அங்கே நிகழவில்லை. எல்லா மொழியினரும் 1, 2, 3 என்ற எண் முறையையே பயன்படுத்துகின்றனர். இக்காரணங்களால், ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் போர் நடந்தபோதுகூட, சுவிஸ் நாட்டிலுள்ள ஜெர்மானியரும் பிரெஞ்சுக்காரரும் ஒருவரோடு ஒருவர் சிநேகபாவமாக இருந்து வந்தனர். எந்த விதமான இனத் தகராறும் சுவிஸ் நாட்டில் கடந்த 700 ஆண்டுகளில் நடந்ததில்லை. இந்தியாவின் அமைதியை நிலைநாட்ட விரும்பினால், நமது நாட்டு இந்தி வாலாக்கள் சுவிஸ் ஜெர்மானியரின் சீரிய உதாரணத்தைப் பின்பற்றுவார்களாக!

ஃ

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

மும் படித்து முன்னுக்கு வருவதைப் பாருங்கள்—

என்று இவ்வாறெல்லாம் திண்ணைப் பேச்சும் அமைதியான பிரசாரமும் ஆற்றலுள்ள அழிவு வேலையும் பெருகித் தமிழின் வளர்ச்சிக்கும் தமிழர் முற்போக்குக்கும் தடை ஏற்படும்.

இவற்றுள் சிலவற்றை இப்போதே வட மொழியும் இந்தியும் படித்தவர்கள் பேசிவரத் தொடங்கியுள்ளார்கள். இதனால், வட மொழியும் இந்தியும் படிக்க வேண்டாம் என்று தடுக்கும் கருத்து இல்லை. ஆனால் அவற்றிற்குச் சில வரையறைகளும் கட்டுபாடுகளும் வகுக்க வேண்டும். வேலி இருக்கவேண்டிய இடம் வேறு; நிலை வேறு. பயிர் செழிக்க வேண்டிய இடம் வேறு; நிலையும் வேறு. வேலி பயிரை மேய இடம் தரக்கூடாது. தாய் மொழியின் - பிரதேச மொழியின்-வளர்ச்சிக்குத் தடையாக இல்லாத வகையில் திட்டம் வகுத்தால் வரவேற்க முடியும். அப்போதும் இளம் பிள்ளைகளின் தலையில் பல மொழிகளைப் பல ஆண்டுகளுக்குச் சுமத்தும் கொடுமை இருக்கவே கூடாது.

(தொடரும்)

சூழ்நிலை

மு. கோவிந்தசாமி, பி. ஓ. எல்.

***

மனிதனின் உணர்வைத் 'தான்' என்றும், அவ்வுணர்வைச் சுற்றி இருப்பவற்றைச் 'சூழ்நிலை' என்றும் கூறுகிறோம். உயிர்(அ) உணர்வு வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைபவையே சூழ்நிலையாம். வாழுமிடத்தைச் சுற்றிய இயற்கை, மற்ற மக்களின் மனப் பண்பு, பொருளாதார அமைப்பு இவையே மனித உணர்வைப் பெரிதும் மாற்றி, உயர்த்தவோ தாழ்த்தவோ வல்ல சூழ்நிலைகளாம்.

மன வளர்ச்சியே மனித இன வளர்ச்சியாக அதாவது நாகரிக வளர்ச்சியாக அமைந்து வந்துள்ளது. 'மனநலம் மன்னுயிர்க் காக்கம்' என்ற குறளடியே இதற்குத் தக்க சான்றாகும். உலகின் இவ்வளர்ச்சிக்குக் காரணமாயிருந்த கொள்கைகளை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று: மனிதனைத் தன்னறிவுடையனாக்கி விட்டால் அவன் சூழ்நிலையைக் கடந்தும், அச்சூழ்நிலையையே மாற்றியும் சமூகத்தை உயர்த்தி விடுவான் என்பது. இக்கொள்கையே தத்துவப் பேரறிஞரான 'பிளேட்டோ' முதலிய பலராலும் பின்பற்றப் பட்டதாம். 300(அ) 400 ஆண்டுகட்கு முன் வரை உலகை நடத்திய கொள்கை இதுவேயெனலாம். மற்றொன்று: மனிதன் சூழ்நிலையால்தான் மாறி வளர்கிறான்; அது அவனது தன்னறிவையும் கடந்து ஆணை செலுத்தும். எனவே முதலில் சூழ்நிலையை மாற்றினாலன்றி மனித இனத்தை மாற்ற முடியாது என்பதாகும். இக் கொள்கைக்கு முதன் முதல் விதையிட்டவர் கம்யூனிஸத்துக்கு ஆசிரியரான 'மார்க்ஸ்' என்ற பேரறிஞரென்னலாம். இவர்க்குப் பின் உலக மனித வளர்ச்சியே ஒரு புது நெறியையும் ஒளியையும் கண்டதென்னலாம். முன்னைய கொள்கை உலகை நடத்திய போதும் இரண்டாவது கொள்கை உணரப் படாமலோ பின்பற்றப்படாமலோ இல்லை. சிறுபான்மையோராலும், உலகின் நல்லறிஞர் பலராலும் பின்பற்றப்பட்டே வந்துள்ளது.

இந்தியத் தத்துவ நூல்கள் யாவும் உலகை; இயற்கை, உயிர், கடவுள் எனப் பிரிக்கின்றன. இவற்றுள் இயற்கையும் கடவுளும் உயிரின் சூழ்நிலை என்னலாம். கடவுளருளிருந்தும் உயிர் சூழ்நிலையைக் (பாவ, புண்ணிய காரணங்கள்) கடந்து கடவுள் தன்மையை அடைவதைவிட அச்சூழ்நிலைக்குள்ளாகிப் பிறந்து பிறந்திறப்பதே மிகுதியாகத் தெரிகின்றது. கடவுள் தன்மை அடையும் மனிதரைவிட மனிதத் தன்மையிலும் தாழ்ந்து வாழ்வோரே மலிந்து காணப் பெறுவதால் உலகில் சூழ்நிலையே ஆட்சி செலுத்துகிறதெனத் தமிழர் நன்கு உணர்ந்திருக்க வேண்டு

மென் அறிகிறோம். இயற்கை யில்லாவிடில் இறைவனும் தன் தொழிலை நடத்த முடியாது எனக் கூறியதிலிருந்தே அவர்கள் இயற்கைச் சூழ்நிலைக்கு எவ்வளவு முதன்மை தந்துள்ளனர் எனக் காண்கிறோம்.

தமிழகம் படைத்த தத்துவப் பேரறிஞர் வள்ளுவர் பெருமானும் 'நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும்', 'மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி', 'பொருள் இல்லார்க் கிவ்வுலகமில்லை' எனக் கூறுவதிலிருந்து தன்னைச் சுற்றிய இயற்கையும், மனித மனமும், பொருளாதாரமும் எப்படி வாழ்வை அசைக்கின்றன என்பதைத் தெளிவாக அறிந்துள்ளார் எனவே உணர்கிறோம். மனித மாறுதலுக்கே 'நட்புடைமை' முதற் காரணம் என அவர் கூறியதிலிருந்தே 'சூழ்நிலை' அவரை மிகவும் கவர்ந்துள்ளது எனப் புலனாகும்.

அன்றியும் பழந்தமிழ்ப் புறநானூற்றுப் புலவர் ஒருவர் சூழ்நிலையாட்சியை நன்கு ஒரு பாடலில் விளக்கி வைக்கிறார்.

நீண்ட வயதாகியும் உமக்கு ஏன் இன்னும் நரைக்கவில்லை? எனக் கேட்டபோது, பிசிராந்தையார் என்ற அப்பெரும் புலவர் 'எனக்குத் துன்பமே மனதில் தங்குவதில்லை, இன்பமே எந்நாளும் - அதாவது வாழ்வில் வளர்ச்சியே என்றும் எனக் கூறி அதுவே நரையாமைக்குக் காரணம் என்கிறார். அத்துன்பமுற்ற நிலை எப்படி ஏற்பட்டது? இதோ பாடல்!

"யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்காகியரென வினவுதி ராயின்
மாண்ட என் மனைவியும் மக்களும்
நிரம்பினர்
யான் கண்டனையர் என் இளையரும்
வேந்தனும் அல்லவை செய்யான்
காக்கும் அதன் தலை
ஆன்றமைந் தடங்கிய கொள்கை
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே"

அவரது குடும்பமும் அடுத்த ஊரும் அதற்கடுத்த நாடும் நல்ல முறையில் அமைந்துள்ளமையால் அவர்க்குத் துன்பமே இல்லையாம்; அதனால் நரையுமில்லை. குடும்பத்தில் மனைவியும், அவளால் வளரும் குழந்தைகளும் அறிவாலும் மனப்பண்பாலும் நிறைவுற்று விளங்குகின்றனர்; இதன் காரணம் ஊரில், நன்கு கற்று உணர்ந்து அடங்கி ஒழுகும் அறிவுடைப் பெரியோர் பலர் சுற்றி வாழ்கின்றனர். இவற்றையெல்லாம் அமைதி பெறக்காக்க அரசாங்கம்(அ) அரசன் கொடுங்கோலனாகாமல் குடிதழீஇக் கோலோச்சும் மாண்புடை மன்னனாகிறான். இங்ஙனம் அங்குள்ள மனித மனம் வளர்தற்கேற்ற குடும்ப அமைப்பும், ஊரமைப்பும், அரசியலமைப்பும் உறுதுணையாய சூழ்நிலையாகின்றன என்ற பேருண்மையையே பிசிராந்தையார் இப்பாடலில் அமைத்துள்ளார். பண்டைத் தமிழக அரசியல் சமூக அமைப்பிற்கே காப்புக் களஞ்சியமாகும் புறநானூற்றிலுள்ள பாடல், இலக்கியப்பாடலுள் ஒன்றெனக் கருதக் கூடியதாம்.

அறிவிலும் பண்பிலும் ஆழ்ந்தும் அகன்றும் வாழ்ந்த புழ்ந்

மதிப்புரை

வரப் பெற்றோம்

சபலம் (சிறு கதைகள்)

ஆசிரியர்: 'ஜீவா' (நாரண - துரைக்கண்ணன்); வெளியிட்டோர்: மகிழ்ச்சி நூலகம் விருது நகர்; விலை 12 அணா.

ஒழிக வகுப்புவாதம்!

ஆசிரியர்: கா. அப்பாதுரை; வெளியிட்டோர்: மீன் பிடிப்போர் கிளைச் சங்கம், திருவல்லிக்கேணி, சென்னை 5. விலை 4 அணா.

மின்னொளி (நாடகம்)

ஆசிரியர்: ப. கண்ணன்; வெளியிட்டோர்: தென்றல் நூற்பதிப்புக் கழகம்; ஜலகண்டபுரம், சேலம் ஜில்லா. விலை ஆறு அணா.

லோகோபகாரி (மாதம் இருமுறை)

ஆசிரியர்: சாமி சிதம்பரனார். தனிப்பிரதி விலை 2 அணா. கிடங்குத் தெரு, சென்னை.

மாயக் குள்ளன் (சிறுவர் கதை)

ஆசிரியர்: சே. பட்டாபிராமன், ரோஜா பிரசுரம், சேலம். விலை ஒரு அணா.

காரை மெயில் (வாரப் பத்திரிகை)

விலை அரையணா. ஆசிரியர்: அ. மாணிக்கம், காரைக்கால்.

சுகுணா: (சிறுவர் கதை)

ஆசிரியர்: சூரியகாந்தி; விலை அரையணா, ஜெயம் வெளியீடு, சேலம்.

திராவிடத் திருமேனி!

திராவிடக் குழுவினர் உயரத்திற் குறைந்த உருவினர்கள். ஏனைய இனத்தினரை நோக்க இவர்கள் குள்ளர்கள். நிறமோ கறுப்பு; தலைமயிர் கறுத்துச் செழித்து வளர்ந்து சுருளும் பண்புடையது. கரிய கண்கள், நீண்ட தலை, மூக்கு முனை அகன்றும் அடிப்பகுதி எடுப்பில்லாது தட்டையாகவும் இருக்கும். முன்னங் கைகள் சற்று நீளம்.

—கிரியர்ஸன்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் சூழ்நிலையை எவ்வளவு மதித்தனர் என்பதற்கு இதுவே நற்சான்றென்னலாம். பின்னர் வந்த காலம் சூழ்நிலையைத் தாழ்த்தி தன்னறிவில் நம்பிக்கை வைத்தமையால் உலக வாழ்வில் மாறுதலும் தாழ்வும் பல நூற்றாண்டுகள் ஏற்பட்டன. தன்னறிவால் வெகு சில அறிஞர் சிறிது காலம் சூழ்நிலையை மாற்ற முடியும். பெரும்பான்மையோர்க்குரிய நெறி 'சூழ்நிலையால் மாறும் நெறி'யே யாகும்.

எனவே வருங்கால உலக அமைப்பில் வளர்ச்சி காண வேண்டுமானால் ஒவ்வொரு குடும்பத்திலும் அதன் ஊரிலுள்ள இயற்கை, மனித மனம் இவற்றிலும் நாட்டாட்சியிலும் நன்மையும் செம்மையும் ஓங்கிச் சூழ்நிலை' அமைய வேண்டும்.

"எல்லோரும் கேளுங்கள்!"

ம. பொ. சிவஞானம்

தலைப்பைப் பார்த்தவுடன் என்மீது கேள்விக் கணைகளை வீசிவிடாதீர்கள்! நான் கேட்கச் சொல்வது பிறரது அறிவை அளவெடுக்கும் கேள்வியன்று. தனது அறியாமையைப் போக்கிக் கொள்ளும் கேள்வியே யாகும். சரியாகச் சொன்னால், 'கேள்வி' என்பது வாயால் கேட்பதன்று; செவியால் கேட்பதாகும். இக்காலத்தில் வாயால் கேட்பதே கேள்வி என்ற வழக்கம் வந்து விட்டதால், இந்த விளக்கம் தேவைப் பட்டது. இனி, பொருளில் புகுவோம்.

இந்தியா அடிமையிலிருந்து விடுதலை பெற்று விட்டது. ஆனால், அறியாமையிலிருந்து இன்னும் விடுதலை பெறவில்லை. இந்திய மக்களில் நூற்றுக்குப் பத்துப் பேரே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்பது ஆட்சியாளர்களின் கணக்கு. அந்தப் பத்துப் பேரிலும் பகுத்தறிவாளர் எத்தனை பேர் என்பது சிந்திக்க வேண்டிய விஷயம்.

கடந்த காலத்தில் கல்வியைப் பற்றிய விஷயத்திலும், கற்றறிந்த சில மேதாவிகள்கூட மூட நம்பிக்கையில் மூழ்கிக் கிடந்தனர். "அடுப்பூதும் மங்கைக்குப் படிப்பெதற்கு?" என்று அடுப்பூதவும் திறமையற்ற ஆண் மக்களில் பலர் கேட்டதுண்டு.

"ஒருவன் கற்றறிந்த புத்திமானாயிருப்பதும், இன்னொருவன் கல்லாத மூடனாயிருப்பதும் அவனவன் பாவ புண்ணியத்தின் பலனே" என்றனர், பழி—பாவத்திற் கஞ்சாதோர் சிலர். ஆனால், இந்தத் தவறான எண்ணங்களிலிருந்தெல்லாம் இன்றைய தமிழகம் விடுதலை பெற்று வருகிறது. என்றாலும், மற்றொரு மூட நம்பிக்கை மக்களின் அறிவு வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக இருந்து வருகிறது. அதாவது "படிப்பு" என்றவுடன் ஏட்டுப் படிப்புத் தான் எல்லோரது கவனத்தையும் கவர்ந்து வருகிறது. இது காரணமாகவே, ஏட்டுப் படிப்பு இல்லாதோரெல்லாம், கல்லாதாரெனக் கருதப்படுகின்றனர். இது, சந்திரனில் படிந்துள்ள களங்கம் போன்று, அறிவாளிகளிடையே இருந்துவரும் அறியாமையாகும். அறிவு பெறுவதற்கான சிறந்த சாதனம் ஏட்டுக் கல்வியே என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. ஆனால், ஏட்டுக் கல்வி பெறமுடியாத நிலையில் உள்ளவர்களும், கேள்வி மூலம் அறியாமையைப் போக்கிக் கொள்ள முடியும். ஆம்; அறிவுத் திறமையைப் பெறுவதற்குக் கேள்வி ஞானமும் சிறந்த சாதனமாகும். அதனால்

தான், ''கற்றிலனாயினும் கேட்க!'' எனக் கட்டளையிட்டார் வள்ளுவர். மற்றும், திருக்குறளில், கல்வி என்ற அதிகாரத்தை அடுத்தே 'கேள்வி' என்ற அதிகாரம் இடம் பெற்றிருப்பதால், கல்வியைப் போன்றே கேள்வியாலும் அறியாமையைப் போக்கி, அறிவைப் பெருக்கமுடியும் என்பதும் புலனாகிறது.

கேட்பினும் கேளாத் தகையவே
—கேள்வியால்
தோட்கப் படாத செவி

என்ற குறளில், **"கேள்வி ஞானத்தைப் பெறாத மக்கள் காது படைத்தும் செவிடர்களே"** என்று கூறுகிறார் வள்ளுவர்.

கவியரசர் கம்பரும், இராம கதையில் (நகரப் படலத்துள்) **"வெண்மை யில்லைபல் கேள்வி மேவ லால்"** என்றார். அதாவது கேள்வி ஞானம் பெறுவதற்கு அயோத்தி மக்களுக்கு நிறைய வாய்ப்பு இருப்பதால் அவர்களிடையே அறியாமை இல்லை என்கிறார்.

கல்லாது நிற்பார் பிறரின்மையிற்
கல்வி முற்ற
வல்லாரு மில்லை

என்றும் கூறுகிறார். வள்ளுவரின் கட்டளையையும், கம்பரது கருத்தையும் பின்பற்றித் தமிழக மெங்கும் கேள்வி ஞானத்தைப் பெருக்குவோ மாயின், நூற்றுக்கு நூறு மக்களையும் அறிவுடையோராக ஆக்க இயலும். ஆனால், ஏட்டின்மூலம் கற்பதுதான் கல்வி—வானளாவும் கட்டிடத்தில் கற்பதுதான் கௌரவம் - தாய்மொழியையும் தாய் இனப் பண்பையும் புறக்கணித்து, அயல் மொழியையும் அம்மொழி வழிப்பட்ட பண்பையும் கற்பதுதான் நாகரிகம் என்ற தவறான எண்ணங்கள் முதலில் மறைய வேண்டும்.

மாகாண அரசினரும் சரி, மத்திய அரசினரும் சரி; பணத் தொல்லையால் அல்லற்படுவதைப் பார்த்தே வருகிறோம். இந்த நிலையில் ''எல்லோரும் படியுங்கள்!'' என்ற முழக்கத்தின் மூலம் கட்டாயக் கல்வி பரப்புவது நல்ல தொண்டாயினும், விரைவில் வெற்றி காணும் வழியன்று. ''எல்லோரும் கேளுங்கள்!'', என்ற கோஷத்தை எழுப்பி மக்கள் அனைவரும் கேள்வி ஞானத்தைப் பெறத் திட்டமிட்டுப் பணியாற்ற வேண்டும்.

தமிழ் மக்களுக்குக் கேள்வி ஞானம் பெற எத்தனையோ வசதிகளும் வாய்ப்புகளும் இருக்கின்றன. ஏட்டுக் கல்வி கற்றோரின் எண்ணிக்கை நூற்றுக்குப் பத்தாகவுள்ள இந்தக் காலத்திலும், தமிழ் நிலத்து மக்கள், வேறு எந்நிலத்து மக்களையும்விட அறிவில் மிக்கவராகவே திகழ்கின்றனர். காரணம், தமிழகத்தில் **கேள்வி ஞானம் பெறுவதற்கான சாதனம் இயற்றமிழாக இருப்பதேயாகும்.** இந்தப் பெரு வாய்ப்பு வேறு எந்த நாட்டு மக்களுக்கும் இருப்பதாக எண்ணுவதற்கில்லை.

புகழேந்திப் புலவர் இயற்றிய அல்லி அரசாணிமாலை, பவழக்கொடி மாலை, புலந்திரன் தூது

போன்ற நூல்களெல்லாம் பெண்ணினத்தின் அறிவை வளர்க்கும் சின்னஞ் சிறு கதைகள் அன்றோ? புகழேந்திப் புலவரின் சிறு கதைகளையெல்லாம், அவர்கள் தாங்களாகவே படித்துக் கற்றார்களா? இல்லை; அப்படிக் கற்றவர்கள் மிகச் சிலரே யாவர். பிறர் படிக்கக் கேட்டுக் கற்ற பெண் மக்களே அதிகம். ஓய்ந்த நேரங்களிலெல்லாம் படித்த பெண்ணொருத்தி புகழேந்தியின் காவியத்தைப் பாடுவாள்; படிக்காத பெண்கள் பலர் அவள் பக்கத்தில் அமர்ந்து செவி கொடுத்துக் கேட்பார்கள். இந்தக் காட்சியை இன்றைக்கும் தமிழகத்துக் கிராமங்களில் காணலாம். புகழேந்தியின் கற்பனைக் கதைகள் மட்டுமல்ல; மதுரை வீரன், தேசிங்குராஜன் போன்ற தமிழ் வீரர்களின் உண்மை வரலாறுகளையும், பாரதம் - ராமாயணம் போன்ற கற்பனை கலந்த காவியங்களையும் இதே முறையில் தான் ஆண்களும் பெண்களும் கற்றுக் களிப்படைகின்றனர்.

அறிஞர்களிடையே கல்வியைப் பற்றி தவறான கருத்து இருப்பது போலவே, கல்வி துவங்கும் பருவத்தைப் பற்றியும் தவறான கருத்து நிலவி வருகிறது. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு இல்லங் கடந்து பள்ளிக்குச் செல்வதிலிருந்துதான் படிப்புத் துவங்குவதாகக் கருதுகின்றனர்; இது சரியன்று; ஏட்டுக் கல்வி துவங்கும் முன்னரே நம் நாட்டில் கேள்விக் கல்வி துவங்கிவிடுகிறது. தொட்டிலில் வளரும் குழந்தைக்குத் தாலாட்டும் பாட்டின் மூலம் அன்னையர் போதிக்கும் எண்ணங்களுக்குத்தான் அளவுண்டோ?

தரையில் தவழும் பருவத்தில் தாயிடம்கேட்கும்நிலாப்பாடல், வான நூலின் ஆரம்பப் பாடமன்றோ?

குந்தி விளையாடும் பிள்ளைக்கு "சாய்ந்தாடம்மா, சாய்ந்தாடு", "கை வீசம்மா கை வீசு" என்று கற்பிக்கப்படுவனவெல்லாம் ஆரோக்கிய சாஸ்திரத்தின் ஆரம்பப் பயிற்சியேயல்லவா?

ஓடியாடும் பருவத்தில், அன்னையர் சொல்லும் கதைகளுக்கும் கணக்கில்லை. அந்தக் கதைகளெல்லாம், இன்று நாம் பணம் செலவழித்துப் படிக்கும் சிறு கதைகளைவிட, எவ்வளவோ சிறப்பானவையாகும். அன்னையர் சொல்லும் கதைகளிலே தாய் இனத்தின் அன்பும், தமிழினத்தின் பண்பும் கலந்திருக்கின்றன. ஆகவே, அன்னையரிடம் கேட்கும் கதைகளினால் குழந்தையின் அறிவு வளர்வது மட்டுமன்று; உள்ளத்தில் அன்பும், பண்பும் வளரவும் முடிகிறது. ஆம்; **நம் ஒவ்வொருவருக்கும் இல்லந்தான் ஆரம்பப் பள்ளி. பெற்றெடுத்த அன்னைதான் ஆரம்ப ஆசிரியை. அன்பும் பண்பும் தான் அவள் துவக்கிவைக்கும் பாடங்கள்.** இதைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளும், கல்வித்துறை அறிஞர்களும் கருத்தில் வைக்க வேண்டும்.

கடந்த காலத்தில் பெரும்பாலும் மக்கள் பெற்றுவந்த கேள்வியறிவு சமய அறிவா

கவே இருந்து வந்தது. சமய ஞானம் என்பது தமிழகத்தில் இறக்குமதியான சரக்கன்று. தமிழினத்தவருடைய எண்ணங்களின் எதிரொலியே யாகும். வேதத்தைப் படிக்கவும், படித்தவர் சொல்லக் கேட்கவும் வேதியருக்கு மட்டுமே உரிமையுண்டு என்று ஒரு கூட்டத்தார் நினைத்திருந்த காலத்திலும் வேதாந்த ஞானத்தை வீடு தோறும், வீதிதோறும் வலியச் சென்று வழங்கிய பெருமை தமிழகத்துப் பண்டாரங்களின் தனியுரிமை. தமிழகத்தில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் சாதாரணமான பேச்சுக்களில் கூட அறிவு செறிந்த கற்பனைகளும், ஆத்ம ஞானக் கருத்துக்களும் வெளிப்படுவதைக் காணலாம். இந்தத் திறமை அவர்களுக்கு எப்படிக் கிடைத்தது? கேள்வி ஞானத்தின் மூலமே யாகும்.

நந்தவனத்திலோர் ஆண்டி—அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை
வேண்டிக்
கொண்டுவந்தான் ஒரு தோண்டி—
அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்
டுடைத்தாண்டி

இந்தப் பாடல் நாம் அடிக்கடி கேட்டுவரும் பண்டாரப் பாட்டுக்களில் ஒன்று. உலகை நந்தவனமாகவும், ஆத்மாவை ஆண்டியாகவும், படைப்புச் சக்தியைக் குயவனாகவும், உடலை அவன் தந்த தோண்டியாகவும் கற்பனை செய்து, நிலையற்ற உடலைக் கொண்டு நிலையான பொருளை அடையும் மார்க்கத்தைப் போதிக்கிறது இப்பாடல். இம்மாதிரி எத்தனை எத்தனையோ ஆத்ம ஞானப் பாடல்களை வீதிகளிலே நித்த நித்தம் கேட்டு வருகிறோம். இவையனைத்தும் சமயத் துறையில் நாம் பெற்று வரும் கேள்வி ஞானமன்றோ?

சமயத் துறையில்தான் கேள்வி ஞானத்தைப் பெறும் வசதிகள் அனைத்தையும் பயன்படுத்தினர் நம் முன்னோர். பண்டை நாளில், ஆலயங்களெல்லாம் சமயக் கல்லூரிகளாக இருந்தன. புலவர்கள், புராணிகர்கள், பாகவதர்கள் ஆகியோரெல்லாம் அக்கல்லூரிகளின் பேராசிரியர்களாக இருந்து சமய ஞானத்தைப் போதித்தனர். இன்று ஆலயங்களில் மூலைக்கு மூலை நாம் காணும் அழகான மண்டபங்களெல்லாம் ஒரு காலத்தில் கேள்வி ஞானத்தைப் போதிக்கும் மன்றங்களாகத் திகழ்ந்தவையாகும். சமயத் துறைக்குப் பயன்பட்ட அதே மண்டபங்களை இன்று சமூகத் துறைக்குப் பயன்படுத்தவும் முடியும். புராணிகர் கடைப்பிடித்த நடைமுறையைக் கொண்டே இன்றைய உலகத்துக்குத் தேவையான புத்தம் புதிய கருத்துக்களையும் போதிக்கலாம். இதில் பிழையொன்றுமில்லை. சான்றாக, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் '**நந்தனார்**' என்ற புராணக் கதையின் பாணியிலே சீர்திருத்தக் கருத்துக்களைப் போதிக்கும் '**கிந்தனார்**' காலட்சேபம் நடத்தி வருவதைக் கூறலாம்.

பழைய பிரசார முறைகளும், இசைக் கருவிகளும் மக்கள்

மனத்தைக் கவரும் சக்தி பெற்றவை. அவற்றை யெல்லாம் கேள்வி ஞானத்தைப் பரப்புதற்கும் பயன்படுத்தினர் நம் முன்னோர். பூசாரி வசமுள்ள உடுக்கை, பம்பை, சிலம்பு ஆகிய கருவிகளை விட கேள்வி அறிவுக்குத் திறம்படப் பயன்படும் கருவிகள் வேறுண்டோ? உடுக்கை அதிர, சிலம்பு ஒலிக்க, பம்பை முழங்கப் பூசாரி மதுரை வீரனின் கதையைக் கூறும்போது, பாமர மக்கள் மெய்ம் மயந்து கேட்பதைப் பட்டி தொட்டிகள்தோறும் இன்றும் காணலாம். பெரும்பாலும் சமயக் கருத்துக்களைப் பரப்பவே பயன்பட்டு வந்த வில்லுப் பாட்டில் சாத்தூர் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் 'சுதந்திரப் போர் வரலாறு', 'கட்டபொம்மன் வரலாறு' ஆகியவற்றை நடத்தி வருவதைக் காண்கிறோம். இதே முறையில் பூசாரிக் கருவிகளையும், வில்லுப்பாட்டுக் கருவிகளையும் கொண்டு கிராம மக்களிடையே விவசாயத்தின் மேன்மையையும், தொழிலின் பெருமையையும் கதைகளின் மூலம் போதிக்கலாம். இந்தக் கருவிகள் மூலமே கப்பலோட்டிய தமிழன், வீரபாண்டியக் கட்டபொம்மன் ஆகியோர் நடத்திய வீரப் போரை விளக்குவதன் மூலம் இந்திய நாட்டின் விடுதலை இயக்க வரலாற்றைக் கற்பிக்கலாம்.

கேள்வி அறிவைப் பெருக்கப் பயன்படும் மற்றொரு சாதனம் தெருக் கூத்தாகும். பண்டைக் காலத்தில் பாமர மக்கள் நாடகக் கலையின் மேன்மையைத் தெருக் கூத்துகள் மூலமாகவன்றி, வேறு வழியில் அறிய வழி ஏது? தெருக் கூத்தாளர்களின் நடிப்பும், அந்த நாடகங்களில் போதிக்கப்படும் கருத்தும் இன்றைய நாகரிக உலகுக்குப் பொருந்தாதனவாக இருக்கலாம். ஆனால், பாமர மக்களின் கலை ஞானத்தைப் பெருக்கத் தெருக் கூத்துத்தான் ஆரம்ப நிலையாகப் பயன்பட்டது என்பதை மறந்துவிடக் கூடாது. அது மட்டுமன்று; மதுரை வீரன், வீரபாண்டியக் கட்டபொம்மன் போன்ற தமிழ் வீரர்களின் வரலாறுகளை மறையவிடாமல் காத்த பெருமையும் தெருக்கூத்தாடிகளுக்கே உண்டு. ஆகவே, தெருக்கூத்து முறையைப் பயன்படுத்தியும் ஏட்டுக் கல்வி கற்க வசதியற்ற மக்களிடையே கேள்வி அறிவைப் பரப்பலாம். ஆனால், தெருக்கூத்து என்று சொல்லும்போது, "அகோ தெப்படியென்றால்,..........மகாராஜா சபைக்கு வரும் விதம் காண்க" என்று கூறும் கட்டியக்காரன் வசனத்தைக் கருத்தில் வைத்துச் சொல்லவில்லை. அண்மையில் தேனாம்பேட்டையில் குறைந்த கட்டண டிக்கட்டுகளின் மூலம் திறந்த வெளி நாடகங்கள் நடைபெற்றனவல்லவா? அந்த முறையைத்தான் கையாள வேண்டும் என்று கூறுகிறேன்.

பொதுவாக, நாடகங்கள் என்பன கிராமப்புறத் தெருக் கூத்துகளின் மறுமலர்ச்சியே யன்றி வேறல்ல. திறந்தவெளி நாடகங்கள் ஊர்கள்தோறும் நடைபெறுவதற்குத் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். இந்த

நாடக மேடைகளில், நகைச்சுவையரசு என். எஸ். கிருஷ்ணன் தயாரித்து நடத்தி வரும் "ஐம்பதும் அறுபதும்" போன்று மக்களை லட்சிய வாழ்வுக்குத் தூண்டும் புத்தம் புதிய நாடகங்கள் இடம்பெற வேண்டும். பழைய தெருக் கூத்துப் பாணியைப் புதிய கருத்துக்களுக்குப் பயன்படுத்த முடியும் என்பதற்கு "ஐம்பதும் அறுபதும்" எடுத்துக் காட்டாகும்.

கேள்வி ஞானத்தைப் பெருக்கும் பொறுப்பை அரசாங்கமோ, அரசாங்க அதிகாரிகளோ நேரிடையாக ஏற்பதால் போதிய பலன் கிட்டாது. மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ள உத்தியோகப் பற்றற்றவர்களிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்து, அரசாங்கமும் அதிகாரிகளும் எல்லா வகையிலும் உதவி புரியவேண்டும். நகராட்சி, நாடாட்சி மன்றங்களும் இந்தத் துறையில் கவனம் செலுத்தலாம். சென்னை நகராண்மைக் கழகத்தார் பாண்டு வாத்தியக் குழுவினரை அமர்த்தி, தினமும் மாலை நேரங்களில் நகரப் பூங்காக்களிலும், கடற்கரையோரப் பகுதிகளிலும் பாடச்செய்வதன் மூலம் மக்களின் இசை ஞானத்தை வளர்க்கின்றனர். இது போலவே, கல்வி - சுகாதாரம் - சிக்கன வாழ்வு ஆகியவற்றில் மக்கள் அறிவு பெறுவதற்காக இசைக் கருவிகள்மூலம், காலட்சேபம், நாடகங்கள் முதலியன நடத்த நகராட்சி மன்றங்கள் முயல வேண்டும்.

"**எல்லோரும் கேளுங்கள் !**" என்ற இயக்கம் வெற்றியடையத் தமிழ் எழுத்தாளர்கள் பெரும் பணியாற்ற வேண்டும். எழுத்தாளர்களின் எழுதுகோல் மக்களின் கேள்வி ஞானத்தைப் பெருக்குவதற்கான புத்தம் புதிய கதைகளை, கவிதைகளை ஆயிரம் ஆயிரமாக எழுதிக் குவிக்க வேண்டும். அப்படி எழுதப்படும் கதைகளிலும் கவிதைகளிலும் **மக்களின் பாராட்டுப் பெற்றவைக்கு** அரசியலார் பரிசு தரவேண்டும்.

'**எல்லோரும் கேளுங்கள் !**" என்ற இயக்கம் பாமரர்களுக்காகவே நடத்தப்படுவது என்ற உண்மையை மறந்துவிடக் கூடாது. எனவே, இந்த இயக்கத்தில் ஈடுபடுவோர் படித்துப் பட்டம் பெற்றோரா யிருப்பினும் **பாமரத் தன்மையைப்** பழிப்பவரா யிருக்கக் கூடாது. பண்டிதர்களாயினும் பாமரர்களோடு நெருங்கிப் பழகுவதன் மூலம்தான் அவர்களுக்குத் தொண்டு புரிய முடியும்.

"**எல்லோரும் கேளுங்கள் !**" என்ற இயக்கத்தால் அறியாமை அகலும்; அறிவு வளரும். பாரதியார் கூறியதுபோல், "வெள்ளம் போல் கலைப்பெருக்கும் கவிப் பெருக்கும் மேவுமாயின் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழி பெற்றுப் பதவி கொள்வர்" என்பது திண்ணம்.

ஆகவே, "**எல்லோரும் கேளுங்கள் !**" என்ற முழக்கத்தோடு, "**காது படைத்தும் செவிடர்களாய் வாழாதீர் !**" என்று வள்ளுவர் செய்த வேண்டுகோளும் நாடெங்கும் பரவ வேண்டும்.

தமிழரசு காண்போம்!

[கி. கவிதைநேசன் திருப்பத்தூர், வ. ஆ.]

●

தமிழன், 'வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித் திருநாடு' எனப் பரந்த நோக்குடன் தமிழகத்தை வாழ்த்துவதோடு, பாரத நாட்டையும் வாழ்த்துகிறான்.

தமிழகம் உலக நாடுகளோடு சமநிலை பெற்று தலை தூக்கி வாழ வேண்டுமென்று பேராவல் கொள்கிறான்.

இந்தியா அடிமைப்பட்ட காலத்திலிருந்து விடுதலை பெற்ற நாள்வரை இடைப்பட்ட காலம் முழுவதும் சுதந்தரப் போரில் ஈடுபட்டுப் பாடுபட்டான். ஒத்துழையாமையில் உதவி புரிந்தான். உப்புப் போரில் ஒத்துழைத்தான். ஆகஸ்ட் போரில் ஆதரவு காட்டினான். இத்தனைக்குப் பிறகும் தன் தாய்த் திருநாடு - தமிழ் நாடு விடுதலை பெறவில்லையே என வேதனைப் படுகிறான். கடமையைச் செய்தோமே, உரிமை பெறவில்லையே எனக் கண்கலங்குகிறான். இதில் பிழை என்ன இருக்கிறது?

(முன் பக்கத் தொடர்ச்சி)

"அறிவு பெருகட்டும்; அறியாமை ஒழியட்டும்" என்ற வாக்கியங்கள் தமிழகத்தின் மூலை முடுக்குகள் தோறும் ஒலிக்க வேண்டும். ஆட்சியாளர்கள் செய்வார்களா? அறிவியல் நிபுணர்கள் சிந்திப்பார்களா?

['கலைக்கதிர்' கோவை.]

'நன்றும் தீதும் பிறர் தர வாரா' என்பது தமிழரின் நம்பிக்கை. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பது தமிழரின் லட்சியம். இந்த நம்பிக்கையும் லட்சியமும் தமிழினத்தை உலகத்தோடு ஒன்றுபடச் செய்கிறதே யொழிய உலகத்திலிருந்து ஒதுங்கி நிற்கத் தூண்டவில்லை. தனது நாட்டினரின் வாழ்வுக்கே யன்றி பிற நாட்டினரின் வாழ்வுக்கும் தனது உழைப்பை உரிமையாக்கியவன் தமிழன். வாணிபத் துறையில் உலக நாடுகளோடு இந்தியாவை ஒன்றாக்கி உறவை வளர்த்தவன் தமிழன்.

வள்ளுவனின் குறளை உலகுக்கு அளித்து வாழ வழி காட்டியது தமிழ் மொழி. அந்தத் தமிழ் மொழியை - தனி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவனும் தமிழனே யாவான்.

இவ்வளவு சீரும் சிறப்பும் பொருந்திய செந்தமிழ் நாட்டார், தனக்கென ஒரு தனியரசு கோருவதில் யாருக்கு என்ன தீங்கு நேரும்? ஒன்றுமில்லை. தமிழன், தான் வாழவே தனியரசு கோருகிறான். அசோகனுக்கும் அடிபணியாது வாழ்ந்த வரலாற்றை வைத்து தமிழரசு கோருகிறான். அரசால் தனித்து வாழ்ந்தாலும், அன்பால் உலக மக்களோடு பிணைந்தே வாழ்வோம் என்று

அறுதியிட்டு உறுதி கூறித்தான் அரசு கேட்கின்றான். தமிழ் நாட்டின் அரசியலைப் பிறர் நிர்ணயிக்காமல் தமிழரே நிர்ணயிக்க வேண்டும் என்று கோருவது குற்றமா? இல்லை; அதுவே நான் தன்மானக் குரல். "தமிழரசு வேண்டும்" என்று தமிழன் கொடுக்கும் குரல் தமிழ் இனத்தவரின் இதயக் குரலாகும். தமிழன் தன்மானம் காக்க, தமிழ்க்கலை வளர, தமிழ் எல்லைகளை மீட்க தமிழரசு வேண்டும். தமிழரசு இல்லையேல், தமிழ்க் கலைக்கு வாழ்வில்லை. தமிழ் மொழிக்கு வளர்ச்சியில்லை. தமிழ் இனத்தவர் வாழ்ந்தும் கெட்டவர் போலத்தான். ஆகவே, தமிழன் கோருவது கலையரசு; மொழியரசு; தன்யான அரசு. இதைத் தமிழர் ஒவ்வொருவரும் நினைவில் வைக்க வேண்டும்.

தமிழரசு, ஐக்ய இந்தியாவின் ஒற்றுமை முன்னணிக்கு ஊறு விளைவிக்காதென்பது உறுதி. உலகத்தோடு ஒத்து வாழவே விரும்புகிறது தமிழ் நெஞ்சம். மொழிவழி தேசீய இனம் ஒவ்வொன்றும் தன் தன் உரிமைக்கு உழைத்து வருகையில், தமிழன் மட்டும் உறங்குவானா?

தமிழ் மக்களின், விட்டுக் கொடுக்கும் மனப் பான்மையைப் பயன்படுத்திக் கொண்டு ஆந்திரரும், கேரளரும் தமிழ் நிலத்தைப் பறிக்க முயல்கின்றனர். விட்டுக் கொடுப்பது, உறவுக்காகவே யன்றி, உரிமையை இழப்பதற்கல்ல.

தமிழர் தங்கள் தாய்த் திருநாட்டின் ஒரு அங்குல நிலத்தைக் கூட இழக்க முடியாது.

தமிழரது தனி வீரமும், பண்பும் இத்தனை நாளும் உலகின் முன் ஒளி மங்கிக் கிடந்தது. இதோ, "தமிழ் சோஷியலிசக் குடியரசு" என்ற அரசியல் கொள்கை நமக்கோர் நல்ல பாதையாக இருக்கிறது.

நாம் கோரும் தமிழரசை, தமிழரசுக் கொள்கையை தேசீயத் தோழர்கள் சிலர் ஆராயாமல் எதிர்க்கலாம். தமிழரசுக் கொள்கையை மறுப்பவர்கள் காங்கிரசையும், காந்தியடிகளையும் மறுப்பவரேயாவர். இதை ஆத்திரமின்றி யோசிப்பின் உண்மை புலப்படும். "மொழிவாரி மாகாணப் பிரிவினை, கலாச்சாரம் மொழி வளர்ச்சிக்கு அவசியம்தான். ஆனால், பிரிவினை, இந்தியாவின் ஐக்கியத்திற்கு முரணாக இருக்கக் கூடாது" என்று 25—1—48-ல் அண்ணல் காந்தியடிகள் அறிக்கை விட்டார்.

காங்கிரசும், காந்தியடிகளும் ஒப்புக்கொண்ட திட்டத்தைக் காட்டி "திரண்டு வாருங்கள் அத்திட்டத்தை நிறைவேற்ற" எனக் குரல் கொடுக்கிறது தமிழரசுக் கழகம்.

அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளின் குடியரசுக் கொள்கையை சான்றுகாட்டி, கடமையைச் செய்ய வாருங்கள் என்று அழைக்கின்றனர் தமிழரசு வாதிகள்.

ஆகவே, தமிழகத்தின் பெருமையைக் காப்போம்; அரசு செலுத்தும் உரிமையைப் பெறுவோம்; தமிழர்களே ஒன்று திரண்டு வாரீர்!

செய்திகள் • •

ஔவை பிறப்பு

தமிழரசுக் கழக செயலாளர் திரு. கா. மு. ஷெரீப்புக்கு அண்மையில் ஒரு பெண் மகவு பிறந்தது. அம்மகவுக்கு ஔவை எனப் பெயரிடப் பட்டது.

கம்பன் தமிழ் மன்றம்

கடந்த 31—5—50ல் நாட்டரசன் கோட்டை கம்பன் தமிழ் மன்ற ஆண்டு விழா அவ்வூர் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. திரு. ம. பொ. சி. தலைமை தாங்கினார். திரு. சுப. இராமநாதன் எம்.ஏ., தலைவரை வரவேற்றுப் பேசினார். கழக உறுப்பினர் திரு. நா. சீனிவாசன் பாரதி மலரை அரங்கேற்றினார். திரு. சுப. அருணாசலம் 'கலங்கரை விளக்கம்'' என்னும் பொருள் பற்றிப் பேசினார். தலைவர் ம. பொ. சி., பேசுகையில், பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் துவக்கிய சுதந்தரப் போரில் ஈடுபட்டதால், வெள்ளையர்களால் கொல்லப்பட்ட மருது பாண்டியர்களின் சமாதிகள் காளையார் கோவிலில் கவனிப்பாரற்றுக்கிடப்பதாகவும் அதை வீர வழிபாட்டுத் தலமாகச் செய்ய வேண்டிய பொறுப்பு நாட்டரசன் கோட்டை வாசிகளுக்கு உண்டு என்றும் கூறினார்.

முத்தமிழ் வளர்ச்சிக் கழகம்

பொருளாட்சி (வடுக பாளையம்) முத்தமிழ் வளர்ச்சிக் கழக செயற்குழுவின் கூட்டம். 29—5—50-ல் நடைபெற்றது. அவ்வமயம் "அண்மையில், இந்திய அரசினர் துவக்கவிருக்கும் விடுதலைப்போர் வரலாற்றில் வீரபாண்டியக் கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் ஆகிய தமிழ் வீரர்களின் வரலாறுகளும் இடம் பெற வேண்டும் என மத்திய அரசினரை வற்புறுத்துவதாக" த் தீர்மானிக்கப் பட்டது. இக்கழகச் சொற்பொழிவு மன்றத்திற்கு திருவாளர்கள் மா. வே. கோனார், வி. எஸ். குமாரகோபால் ஆகியோர் முறையே தலைவராகவும் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

பொருளாட்சி தமிழரசுக் கழகம்

இக்கழக உறுப்பினர்கள் கூட்டம் 26—5—50-ல் நடைபெற்றது. அவ்வமயம் கழகத்திற்கு பின்வரும் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவர்: தி. கந்தசாமி, துணைத் தலைவர்: பா. நி. ஆனந்தம், செயலாளர்: இரா. சுப்ரமண்யம், துணைச் செயலாளர்: வா. பா. அக்காலஞ் செட்டியார் ('இளங்கதிர்') பொருளாளர்: மா. வேங்கடாசலம், உறுப்பினர்கள்: பி. கே. மாரிமுத்து, ப. மாரியப்பன், ந. சுந்தரராஜன்.

தாலுக்கா கழகம் அமைக்கவும், கிராமங்கள்தோறும் கிளைக் கழகங்கள் நிறுவவும் திட்டமிடப்பட்டது. கழக மாணவ ரில்லத்திற்கு திரு. பொ. நா. நடராஜன் தலைவராகவும், திரு. கா. வெள்ளியங்கிரி செயலாளராகவும், திரு. பொ. நா. வாசுதேவன் துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

திருவள்ளுவர் நூல் நிலையம்

கூடலூர் (ஓ. டி.) மேற்படி நிலையத்தின் உறுப்பினர்கள் கூட்டம் 28—5—50-ல் கூடிய போது, அண்மையில் இந்திய அரசினர் வெளியிடவிருக்கும் இந்திய விடுதலைப் போர் வரலாறு வீரபாண்டியக் கட்டபொம்மன் நிகழ்த்திய புரட்சியை ஆரம்பமாகக் கொண்டே எழுதப்பட வேண்டுமென வற்புறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தமிழ் முறைத் திருமணங்கள்

தமிழன்பன் - ராதாபாய்

கள்ளக்குறிச்சி தமிழரசுக் கழகத் தோழர் திரு. நா. தமிழன்பனுக்கும், திருமதி ராதாபாய்க்கும் 22—5—50-ல் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் சார்பாக, 'தமிழ் முரசு' வளர்ச்சிக்கு ரூ. 2) நன்கொடை அளிக்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மாரியம்மன் - பொன்னம்மாள்

பொருளாட்சி நகர் தமிழரசுக் கழக செயற்குழு உறுப்பினர் திரு. மாரியப்பனுக்கும், திருமதி பொன்னம்மாளுக்கும் 26—5—50-ல் திருமணம் நடைபெற்றது. உள்ளூர் தமிழரசுக் கழகத் தோழர்களும் பிறரும் மணமக்களை வாழ்த்தினர்.

ஜனார்த்தனம் - பார்வதி

கள்ளக்குறிச்சி திரு. கி. ஜனார்த்தனத்திற்கும், திருமதி பார்வதிக்கும் 25—6—50-ல் தமிழ் முறைப்படி திருமணம் நடைபெற்றது. திரு. ம. பொ. சி திருமணத்தை நடத்தி வைத்தார். திருவாளர்கள் கா. மு. ஷெரீப், சோம. சாமிநாதன், உள்ளூரிலுள்ள தமிழரசுக் கழகத் தோழர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தார், காங்கிரஸ் வாதிகள் மற்றும் பலர் திருமணத்தில் கலந்து கொண்டனர். அன்பர்களாலும், கழகங்களாலும் வாழ்த்துக்கள் அளிக்கப் பட்டன.

தலைவர் ம. பொ. சி. பேசுகையில் கூறியதாவது:—

"தமிழ் நாட்டில், தமிழர்களிடையே திருமணம் என்றால், அது தமிழ் மொழியிலும் தமிழர் வழியிலும்தான் நடத்தப்பட வேண்டும். பிராமணர் தான் நடத்திவைக்க வேண்டுமென்பதோ, அல்லது பிராமணரே கூடாதென்பதோ தவறு. இந்த இரண்டும், சாதி வேற்றுமையையும் உயர்வு-தாழ்வையும் அங்கீகரிப்பது போலத்தான். அந்தணர் என்பது பொருள் இழந்த பெயர். அந்தணரல்லாதார் என்பது வரலாற்றிலோ இலக்கியத்திலோ, அனுபவத்திலோ இல்லாத பெயர். ஆகவே, இந்த சாதி வேற்றுமைகளை ஒழித்து தமிழர் எவராயினும், தமிழ் முறைப்படி திருமணம் நடத்த முன்வந்தால் தமிழரசுக் கழகத்தார் மனமுவந்து வரவேற்பர். அந்தணரும் இதற்கு விதிவிலக்கல்லர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில், காதல் மணம்தான் நிகழ்ந்து வந்ததென்பதை அகநானூறு அறிவிக்கிறது. சாதிகள் தோன்றிய பின்னரும் கூட, கலப்பு மணங்கள் சர்வ சாதாரணமாக நிகழ்ந்திருக்கின்றன. இரண்டு வேறுபட்ட மதத்தாரிடையேயும் கலப்பு மணம் நடைபெற்றதுண்டு. பௌத்த மதத்தினனாகிய கோவலனுக்கும், சமண சமயத்தினளாகிய கண்ணகிக்கும் திருமணம் நடந்ததே இதற்குச் சான்றாகும். இக்காலத்திலும் தமிழர் மரபுவழி சாதிக் கலப்பு, மதக்கலப்புடைய திருமணங்கள் நிகழவேண்டும். தமிழினத்தார் ஒற்றுமைப்பட அது ஒன்றே வழி.

"திருமணத்தில் மணப்பெண் அருந்ததி பார்ப்பது இக்கால வழக்கமாக இருக்கிறது. முன்னாளில் இவ்வழக்கம் இருந்ததில்லை. அருந்ததியைப் பற்றி முதன் முதலாகப் பிரஸ்தாபிக்கும் சிலப்பதிகாரத்தில் கூட, 'கண்ணகி அருந்ததியைப் போன்றவள்' என்று கூறப்படுகிறதேயன்றி, அவள் அருந்ததி பார்த்ததாகக் கூறப்படவில்லை. சங்க இலக்கியங்களில், அருந்ததி என்ற பெண்ணைப் பற்றிய செய்தியே இல்லை. வானத்திலுள்ள ஒரு நட்சத்திரத்தை கற்புக்கு சான்றாகக் கூறப்பட்டது உண்மை. அது, 'வடமீன்', 'விண்மீன்' என்று கூறப்பட்டதேயன்றி, அருந்ததி என்று கூறப்படவில்லை. சங்கப் புலவர்கள் குறிப்பிட்ட விண்மீனுக்கே, பிற்கால சமய வாதிகள் அருந்ததியெனப் பெயர் கொடுத்து கற்பனை வரலாறுகளை சிருஷ்டித்திருக்க வேண்டும். ஆகவே, இந்த அருந்ததி பார்க்கும் வழக்கம் இக்காலத்திற்கு அவசியமில்லை.

திருமணச் சடங்குகளில் சீர்திருத்தம் கண்டால் மட்டும் போதாது. செலவிலும் சிக்கனமிருக்க வேண்டும். மேலும், நம்முடைய சீர்திருத்த மனப்பான்மை வேறு எந்த சாதிக்கும், மொழிக்கும், பண்புக்கும் எதிரிடையாக இருக்கக் கூடாது."

நடப்பது சர்வாதிகாரம்; நாடுவதோ ஜனநாயகம்!

தேசம் துண்டாடப்பட்ட போது, ஒரே வருடத்தில் பாக்கிஸ்தான் குலைந்து விடுமென நம்மில் பலர் கருதினோம். பல பல நிபுணர்களும் இவ்வாறே கூறினர். ஆனால், இன்று நாம் காண்பதென்ன? இந்தியாவை விடச் சீரான நிலையில் பாக்கிஸ்தான் இயங்குகிறது. அரசியல் திட்டத்தைத் தயாரிப்பதில், பாக்கிஸ்தான் அவசரப்படாததே இதற்குக் காரணம். இந்தியாவும் புதிய அரசியலைத் தயாரிப்பதை தள்ளிப் போட்டிருந்தால் ஒன்றும் குடி முழுகிப் போயிருக்காது. ஜனநாயகத்தில் நம்மவருக்குப் பயிற்சியில்லை. நம் போக்கெல்லாம் சர்வாதிகாரமே; ஆனால் வேண்டுவதோ ஜனநாயகம்!

—ஹரிகிருஷ்ண மஹதாப்
(தொழிலமைச்சர்)

கருத்தோவியம்

அழியாப்புகழை நாடுகிறவன் உயிரைத் திரணமாகத்தான் மதிக்க வேண்டும்.

—பிவோவுல்ப்.

ஃ

புகழ்பெற வேண்டும் என்ற எண்ணமொன்றுதான், நமது வாழ்க்கையில் எல்லாவிதமான கஷ்டங்களையும் சகித்துக்கொள்ளக் கூடிய ஓர் ஆற்றலை நமக்கு அளிக்கிறது. —மில்டன்.

எப்படி ஒரு தாய் தொட்டிலை ஆட்டிக்கொண்டே குழந்தையைப் பாடித் தூங்க வைக்கிறாளோ, அப்படியே நாமும் உலகத்தில் வேலை செய்துகொண்டே மன அமைதி பெற வேண்டும்.

—ஓர் அறிஞர்.

ஃ

உழைப்பின் பயனை விட, உழைப்பே மதுரமாயிருக்கிறது. வெற்றியைவிட போராட்டமே இனிமையாயிருக்கிறது.

—ஓர் அறிஞர்.

குறைந்த விலை ! சிறந்த பிரசுரம் !!

தமிழரசுக் கழகத் தலைவர்

ம. பொ. சிவஞானம் எழுதிய

பிரிவினை வரலாறு	0	6	0
மே தினப் புரட்சி	0	2	0
தமிழன் குரல் (இரண்டாம் பதிப்பு)	1	4	0

ஆகிய மூன்றும் தமிழரசுக் கழகப் பிரசுரங்களாக குறைந்த விலையில் வெளிவந்து விட்டன. வேண்டுவோர் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

இன்ப நிலையம்

மயிலாப்பூர் : : சென்னை 4.

ஆசிரியரும், வெளியிடுபவரும் : ம. பொ. சிவஞானம், 1-29, இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி. அச்சிட்டவர் : தி. கண்ணபிரான், ஜெயா அண்டு கம்பெனி, (பாரமவுண்ட் பிரஸ்) 582/588 ஹை ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.

பதிவு எண் M. "TAMIL MURASU"